(7)

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ஹு மாசி மீ. [பகுதி-ச.

## தமிழ்நாட்டில் வழங்கும்
## கண்ணபிரான் சரிதங்கள்.

ஸ்ரீமகாபாரதம் பாகவதமுதலிய இதிகாசபுராணங்களிலே, கண்ணபிரான் அவதரித்தருளி உலகை உய்யக்கொண்ட சரித்திரங்கள் முழுதும் கூறப்பட்டுள்ளன. இச்சரிதங்கள் பலவற்றைத் தமிழ்நாட்டாரும் முற்காலமுதலே அறிந்து போற்றிவந்தவரென்பது பழையநூல்களால் அறியக்கிடக்கின்றது. ஆயினும், வடநூல்களினின்று சிறிது வேறுபாடுடையனவும், அந்நூல்களால் அறியப்படாதனவுமான சிலகதைகள் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. இவ்வாறு வழங்குதற்குத்தக்க ஆதாரங்காண்டல் இப்போதரிதாயினும், முன்னிகழ்ச்சியே கன்னபரம்பரையாகத் தமிழ்நாட்டில்வந்து வழங்கலாயிற்றென்று கொள்ளத்தக்கது. இங்ஙனம் வழங்கும் சரிதங்களில் முக்கியமானவை:—நப்பின்னைப்பிராட்டியார், குருந்தொசித்தது, குடக்கூத்து, சீமாலிகன்கதை, ததிபாண்டனும் தயிர்த்தாழியும் மோக்ஷம்பெற்றது—என்பவைகளாம். இவற்றை ஒவ்வொன்றாகக் கூறுவேன்:—

### க. நப்பின்னைப்பிராட்டியார்.

கண்ணபிரான்மணந்த பிராட்டிமார்களிலே, தமிழ்நூல்களில் மிகுதியும் சிறப்பித்துக்கூறப்படுவோர் நப்பின்னைப்பிராட்டி என்னுந்திருநாமமுடையார். இதனை, "நிலமகட்குக் கேள்வனு நீணிரை

நப்பின்னை - யிலவலர்வா யின்னமிர்த மெய்தினு னன்றே." (சிந்தாமணி) "வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப் - பெய்வளைக் கையாணம் பின்னைதானும்" (சிலப்பதிகாரம்) "மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையு, மாடிய குரவை" (மணிமேகலை) "ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவன்" (திருக்கோவையார்) "பின்னை தோண்மணந்த பேராயா" (திருவாய்மொழி) "உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்-உத்தர மாமதுரைக் கச்சென்ப" (திருவள்ளுவமாலை) என்பன முதலாகவரும் பிரமாணங்களால் உணர்க. இப்பிராட்டியைப் பின்னை, பிஞ்ஞை, நீளை எனவும் வழங்குவர். நேமிநாத விருத்திகாரர் "பாலேதிணையே" என்னும் வெண்பாவுரையில், 'உப்பக்கநோக்கி' என்னும் திருவள்ளுவமாலைப்பாட்டை எடுத்தோதி "இதனுள் உபகேசியார்-நப்பின்னைப் பிராட்டியார் என்று உரை கூறுதலால் 'உபகேசி' என்னும் பெயரும் இவர்க்குண்டென்பது தெரிகின்றது. நப்பின்னை என்பதிலுள்ள "ந - சிறப்புப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல; நம்பின்னை, விகாரமுமாம்" என்பர் நச்சினார்க்கினியர். (சிந் - நாமக. எச.)

இப்பிராட்டியை, ஆயர்குலமகளெனவும், கண்ணபிரான் ஆயர் மணமுறைப்படி கன்யாசுல்கமாக வைக்கப்பட்ட எழுவிடைகளைத் தழுவியடர்த்து இவளை மணம் புரிந்தனரெனவும் தமிழ்நூல்கள் கூறும். கூர்நுதிக் கோட்டினையுடைய இமிலேறுகளைப் பறையறைந்து வெளியில் விடுத்து, அவற்றைத் தழுவிப் பிடிப்பானுக்கே மகட்கொடுப்பதென்னும் மணவிதி, ஆயர்களது தொன்றுதொட்ட மரபென்பது, கலித்தொகை முல்லைப்பகுதியை நோக்குவார்க்கு நன்கு விளங்கும். இவ்விதிப்படி பெருமான் விடையேழடர்த்து மணந்த சரித்திரத்தை ஆழ்வாரும், "ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமி லேற்றுவன்கூன்—கோட்டிடை ஆடினை கூத்தயர் ஆயர்தங் கொம்பினுக்கே" என்றும், "நிறைவினாற் குறைவில்லா நெடும்பணைத்தோண் மடப்பின்னை, பொறையினால் முலையணைவான் பொருவிடையேழடர்த்துகந்த" என்றும் பணித்தார். இங்ஙனம், கண்ணன் பின்னையை மணந்தபின் அவளுடன் கூடி நிகழ்த்

திய சரிதைகள் பலவென்றும், அவற்றைப் பழைய தமிழ்மக்கள் "பாலசரிதை நாடகம்" என்னும் பெயராலழைத்தும், நாடகமாக நடித்தும் வந்தனரென்றும், சிலப்பதிகாரத்தாற் றெரியவருகின்றது. இவ்வாறு, அந்நூலில்வரும் ஆய்ச்சியர் குரவையில் நடித்துக்காட்டப்பட்ட பாலசரிதை, ஆயர்பாடியில், தாதெருமன்றம் என்ற விடத்தே, யசோதைப்பிராட்டியாரும் பிறருங் காணுமாறு, கண்ணபிரானும் நம்பிமூத்தபிரானும் (பலராமர்) பின்னைப் பிராட்டியை மத்தியமாகக்கொண்டு ஆடிய அற்புதக் குரவையேயாம். இதனை "ஆயர் பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தன்முன்னுடிய பாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய குரவை" எனவும்.

"மாயவன்றன் முன்னிஞெடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
வாய்வளைச்சீர்க் கடிபெயர்த்திட் டசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே"

எனவும் சிலப்பதிகாரத்து வருதலாலும், "மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்—ஆடிய குரவையிஃ தாமென வேத்தியும்" என்னும் மணிமேகலையடிகளாலும் அறியலாகும். இங்ஙனமாடிய குரவைச்சிறப்பை இளங்கோவடிகள்,

"கதிர்திகிரி யான்மறைத்த கடல்வண்ண னிடத்துளாள்
மதிபுரையு நறுமேனித் தம்முன்னேன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தற் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனுர் முந்தைமுறை நரம்புளர்வார்"

எனப்புகழ்தலுங் காண்க. குரவையாவது பலர்கூடிக் கைகோத் தாடுதல் என்பர். இப்பிராட்டி, ஆயர்குலமகளென்பதே முன்னையோர் கருததெனபது "நீணிரை நப்பின்னை" (சிந்தா) "ஆயனுகி ஆயமங்கை வேயதோள் விரும்பினுய்" (ஆழ்வார்) என்பவற்றாலும் சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையாலும் பிரசித்தமாம்.

இனி, வடநூல்களை ஆராயுமிடத்து—கண்ணன் மணந்த மகளிர் பல்லாயிரவரென்றும், அவருள் தலைசிறந்தார்:—ஸ்ரீ ருக்மணிப் பிராட்டி, சத்தியபாமை, ஜாம்பவதி, காளிந்தி, மித்திரவிந்தை, சத்

தியை, பத்திரை, லக்ஷ்மணை—என்னும் அஷ்டமகிஷிகளென்றும், அவருள்ளும் முதலிருவருமே கண்ணனால் மிகவுமுகந்தருளப்பெற்ற வரெனவும் தெரியவருகின்றன. பாகவதத்துக்கண்ட இவ்வெண்ம ரில், பத்திரை, மித்திரவிந்தை, சத்தியை என்னு மூவர்பெயர்க்குப் பிரதியாக மாத்திரி, லக்ஷ்மணை, நாக்னஜிதி என வேறுபெயர்கள் விஷ்ணு புராணத்துக் கூறப்படுகின்றன. இவர்களுள் சத்தியை எனவும் நாக்னஜிதி எனவும் பெயர் பெற்ற நங்கை அயோத்தி நாட்டரசனான நக்னஜித் என்பான் மகளென்றும், பேரெழில் வாய்ந்த அம்மகளைக் காதலித்து அரசர்பலரும் தன்னைத்துன்புறுத் திவந்தமையால் நக்னஜித்தரசன், தன் நிரைகாவலனும் யசோதைப் பிராட்டிக்குத் தம்பியுமாகிய கும்பாண்டன் என்பவனிடமுள்ள கொடிய விருஷபங்களேழையும் தழுவிப்பிடிப்பவற்கே தன்மகளை மணம்புரிவிப்பதாக நிச்சயிக்க, அவ்வெருதுகட்கஞ்சி அரசர்கள் மகட்பேசலைத் தவிர்ந்தொழிந்தாரென்றும், அக்காலத்துக் கண்ணபி ரான் அவ்வரசன்பாற் சென்று அவனாற் கன்யாசுல்கமாக வைக்கப் பட்ட விடையேழினையுந் தழுவியடர்த்து, சத்தியை என்ற அக்கன் னியை மணம்புரிந்தாரெனவும், ஸ்ரீமத்-பாகவதங் கூறுகின்றது. இச் சரிதத்தால் க்ஷத்திரிய அரசனாகிய நக்னஜித்தின் மகளே கண்ணனால் விடை தழுவி மணக்கப்பெற்றவர் என்பது போதரும். இவ்வரலாறு நப்பின்னைப் பிராட்டி விஷயமாகத் தமிழ் நூல்கள் கூறுவதோடு பெரிதும் ஒற்றுமைபெறினும், ஆயர்குலத்தினளாகக் கூறப்பட்ட அவள் க்ஷத்திரியகுலத்தாளாகக் காணப்படுவதுமட்டும் வேறுபடு கின்றது. ஆயினும், தன் நிரைகாவலனாகிய கும்பாண்டன் மகளை யே நக்னஜித் தன்மகளாக அபிமானித்து வளர்த்திருத்தல் கூடுமா யின், இச்சரித்திரம் தமிழ்வழக்கோடு பொருந்திவிடும். அவ்வாறு வடநூலிற் சொல்லப்பட்டிலதேனும், "நீளாதுங்கஸ்தனகிரி" என் னும் திருப்பாவைத் தனியனுக்கு வியாக்கியானமருளிச்செய்யுமிடத் தே, ஸ்ரீ பிள்ளைலோகம் ஜீயர் "இவளும் யசோதைப் பிராட்டி சகோ தரரான கும்பர் குமாரத்தியாக அவதரித்தபடி" எனக்கூறியும், "மிதி லைதேசத்தே, நந்தகோபன் மைத்துனனும் மிகுந்த ஆநிரையுடை யோனும் யசோதையார்க்குத் தம்பியுமான கும்பகனுக்கும் அவன் பாரியை தர்மதை என்பாட்கும் ஸ்ரீதாமா என்ற புத்திரனும் நீளை

என்ற கன்னிகையும் பிறந்தார்கள்" என்னுங் கருத்துடைய புராண சுலோகங்களை உதகரித்தும் போந்தமையால், கும்பகனென்ற ஆயர் தலைவனுடைய மகளே நீளை என்ற நப்பின்னைப்பிராட்டியார் என்பது வலியுறுகின்றது. தமிழ் வழக்கும் வடவழக்கும் ஒற்றுமை பெறு வதற்கு இங்ஙனம் இயைத்துக்கொள்ளுதலே பொருத்தமாம்.

இனி, கண்ணன் பலராமர்களோடு சேர்ந்து நப்பின்னைப்பிராட்டி, ஆயர்பாடியில் தாதெருமன்றத்தே குரவைக்கூத்தாடியதாகத் தமிழ்நூல்கள் கூறுமாறு பாகவதம் விஷ்ணுபுராணமுதலிய வடநூல் களிற் காண்டலரிது. ஆனால், ஷை புராணங்களில் கோவர்த்தனத் தைக் குடையாகப் பிடித்தபின்னர், கண்ணன் கோபியர்களெல்லா ருடனும் சேர்ந்து "ராஸக்கிரீடை" செய்தருளினரென்று கூறப்பட் டுள்ளது.

இனி, கண்ணனுடைய அஷ்டமகிஷிகளிலொருவராய் அப் பிரானால் விடை தழுவிக்கொள்ளப்பட்ட சத்யவதி என்ற பிராட்டி யைப்பற்றி-அவர் கல்யாணவரலாறு தவிர - வேறு புகழ்ச்சியேனும் பிரஸ்தாபமேனும் பாகவதமுதலிய புராணங்களிற் காணப்படவில்லை. பழைய தமிழ் நூல்களோ, கண்ணனுடைய ஏனை மனைவியரைப்பற் றிக்கூறுவதினும், நப்பின்னையோடு அப்பிரான் புரிந்த லீலைகளையே மிகுதியாகக் கூறுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்போது, நப்பின்னைப் பிராட்டியைப்பற்றி வடநாட்டார்க்குத் தெரிந்ததினும் அதிகமான வரலாறுகள் தமிழ்நாட்டிற் பழங்காலமுதலே வழங்க லாயின வென்பது நன்குணரப்படுகின்றது.

## உ. குருந்தொசித்தது.

கண்ணபிரானது 'பாலசரிதை'களில் குருந்தமரத்தை ஒசித்த தும் ஒன்றாம். இதனை "பரப்புற்ற, கொல்லைப் புனத்துக் குருந் தொசித்தாற் பாடுதும்" "கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாய வன்" (சிலப்பதிகாரம்) எனவும், "காமருசீர்த் தண்ணறும் பூங் குருந்தஞ் சாய்த்ததூஉம்............பூவைப்பூ வண்ண னடி" (திரி கடுகம்) எனவும் வருவனவற்றாலும்,— "குருந்த மொன்றொசித் தானொடுஞ் சென்று கூடியாடி விழாச்செய்து" "கொங்கலர்ந்த

மலர்க்குருந்த மொசித்த கோவலன்" என்னும் ஆழ்வார்கள் திரு வாக்காலும் அறியத்தக்கது. இவ்வாறு குருந்தொசித்த சரித்திர மொன்று தமிழ் நூல்களிற் பிரபலமாக வழங்குதல்போல, வடநூல் களிற் காண்டல் அரிதாம். "கொல்லைப் புனத்துக் குருந்தொசித் தான்" என்பதற்கு அடியார்க்கு நல்லார், "கொல்லையில் வஞ்சத் தால் வந்துநின்ற குருந்தை ஒசித்தவன்" என்று உரைகூறுதலால், குருந்தரூபமாகத் தம்மைக்கொல்லவந்த அசுரனொருவனைக் கண் ணன் முறித்துக் கொன்றருளினர்—என்பது சரித்திரமாகத் தோற் றுகின்றது. இவ்வாறே, அசுராவிஷ்டமான குருந்தென்று ஆழ்வார் பாசுரங்கட்கும் வியாக்கியானம் எழுதப்பட்டுள்ளதென்பர். இனி சிவக சிந்தாமணி நாமகளிலம்பகத்தில் (கஅ௦.)

"நீணிற வண்ண னன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
பானிற வண்ண னேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய்
வேனிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
கோனிற வளையி னர்க்குக் குருந்தவ னொசித்த தென்றான்"

என்னும்பாட்டும், "மாயோன் பலதுகிலைக் கவர்ந்து தம்முனாகிய பாலிறவண்ணன் (பலராமர்) நோக்கின் பழியுடைத்தென்றுகாண், தொழுனை (யமுனை) யாற்றிலே கோவியர்களுக்குக் குருந்தொசித் தது." என்ற நச்சினார்க்கினியருரையும், முற்கூறிய குருந்தொசித்த வரலாற்றை வேறுவிதமாகக் கூறுவதாகும். கண்ணபிரான், யமு னையில் நீர்விளையாட்டயர்ந்த கோவியருடைய துகில்களை அவரறி யாமற் கவர்ந்து பக்கத்துள்ள குருந்தமரத்திலொளித்துப் பின் அம் மகளிர் வந்து வேண்டத் துகில்களையளித்து, அக்குருந்தையுமுறித் துச் சென்றாரென்னும் வரலாறு இப்பாட்டிற் கூறப்படுகிறது. இவ் வாறே "குருந்திடைக்கூறைபணியாய்" என்று பெரியாழ்வாரும், "நீரினிற் குடைந்து பாரில் நிகரிலாக் கலன்கள் பூண்ட, நாரியர் துகி லை வாரி நலனுறுங் குருந்திலேறி" என்று பிறருங் கூறினர். இனி பாகவத முதலிய நூல்களில் கண்ணன் துகில்களை ஒளித்த மரம் கடம்பு என்றே கூறப்படுகின்றது. அன்றியும் அக்கடம்பு அசுரா விஷ்டமானதென்று அந்நூல்களிற் கூறப்படவில்லை. ஆனால், கண்ணன் திருவடி தீண்டப்பெற்றதனால் நற்கதி பெற்றதாகச் சொல் லப்பட்டுளது.

இவ்வாறு, குருந்தமரத்தைப்பற்றிய இரண்டு வரலாறுகளும் வடநூல்களிற் காண்டலரிதாகவும், தமிழ்நூல்களில் அது வழக்கு மிகப்பெற்று மிருத்தல் காண்க.

## ௬. குடக்கூத்து.

கண்ணபிரான் பேரனும் பிரத்தியும்நன் மகனுமாகிய அநிருத்தன், சோணிதபுரத்தே பாணாசுரன்மகளான உஷாதேவியைக்காதலித்து அவளோடிருத்தலை அவ்வசுரன்கண்டு அவனைச்சிறைப்படுத்த, அச்செய்தி தெரிந்து கண்ணபிரான் அவ்வசுரனுடன் பெரும்போர் புரிந்து தம்பேரனைச் சிறைமீட்ட வரலாறு புராணங்களிற் கூறப்பட்டுளது. பழைய தமிழ் நூல்களில், இச்சரித்திர சம்பந்தமாக இரண்டு கூத்துக்கள் கூறப்படுகின்றன. அவை, குடக்கூத்து, பேடு என்பன. குடக்கூத்தென்பது, கண்ணன் பேரனான அநிருத்தனை, தன்மகள் உழைகாரணமாக வாணன் சிறை வைத்தபோது, அப்பிரான் அவ்வசுரனது சோ (சோணிதபுரம்) என்ற நகரிற் சென்று குடங்கொண்டாடியதைக் குறிப்பதென்பர். "இதனை வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோ னாடிய குடமும்" என்ற சிலப்பதிகார அடிகளானுணர்க. "குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாட வல்லவெங் கோவே" என்ற பெரியார் திருமொழியும் இதனையே கருதியதுபோலும்.

இனி, 'பேடு' என்னுங் கூத்தாவது, கண்ணபிரான் மகனாகிய பிரத்தியும்நன் (இவனைக் காமனென்று தமிழ் நூல்கள் கூறும்.) உழைகாரணமாக வாணனாற் சிறைவைக்கப்பட்ட தன்மகன் அநிருத்தனைச் சிறைமீட்டு வாணனது சோநகரத்துப் பேடியுருவங்கொண்டு ஆடியதென்பர். மணிமேகலையில் "வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி—நீணில மளந்தோன் மகன்முன் னாடிய பேடிக் கோலத்துப் பேடு" என வருதலால் அறிக.

இவ்விரண்டு சரித்திரங்கட்கும் ஆதாரம், வடநூல்களிலிருந்து இப்போது விளங்கக் கூடவில்லை.

இனி, ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் வழங்கும் கண்ணன் வைபவங்கள் சிலவற்றுக்கும் வடமொழிப் பிரமாணமில்லையெ

னக் கூறுவர். அவை சீமாலிகன் தலையறுப்புண்டது, ததிபாண்ட னும் அவன் தாழியும் மோக்ஷம் பெற்றது—என்பவை.

## ச. சீமாலிகன் தலையறுப்புண்டது.

சீமாலிகனென்பான் ஓர் இடையன். இவன் கண்ணனுக்கு உசாத்துணைவனாய் உடனிருப்பவன். இவனுடன், கண்ணன் சம்பாஷித்துக்கொண்டு செல்லும்போது அப்பெருமானது கரத்திருந்த சக்கராயுதத்தைத் தான் தூக்கிச்செல்லும்படி தன்னிடம் கொடுக்குமாறு இவன் கண்ணனைப் பலமுறைகேட்க, பெருமான் "அது தலையை அறுத்துவிடு" மென்றுகூறியும் கேளானாய் அவ்விடையன் வற்புறுத்த, முடிவில் சக்கரத்தைக் கண்ணன் அவன்கையிற்கொடுக்கும்படி நேரவும், உடனே அஃது அவன்தலையை அறுத்துத்தள்ள அவன் மோக்ஷித்தனன் என்பர். இது

"சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய்
சாமா றவனைநீ யெண்ணிச் சக்கரத்தாற் றலைகொண்டாய்"

என்ற பெரியாழ்வார் திருமொழியானும் அதன் வியாக்யத்தானும் அறிந்தது.

## ரு. ததிபாண்டனுக்குந் தாழிக்கும் வீடளித்தது.

கண்ணபிரானது அற்புத லீலைகளிலே, அப்பிரான் ததிபாண்டனுக்கும் அவன்தாழிக்கும் மோக்ஷமளித்த வரலாறும் ஒன்று. அஃதாவது:—கண்ணன், இளம்பருவத்தோர்நாள் வெண்ணெய் களவு கண்டபோது, தாயான யசோதைப்பிராட்டியார் அறிந்து வெகுண்டு பிள்ளையைத் தண்டிக்கவெண்ணி அப்பிரானைப் பிடித்தற்கோட, கண்ணனும் அதற்கஞ்சியதுபோல் நடித்துத் தாய் கைக்கு அகப்படாமற்றப்பித் ததிபாண்டனென்னும் இடையனதகம்புக்கு ஒளித்துக்கொள்ள, அவ்விடத்தைநோக்கி யசோதையார் விரைந்து வருதலறிந்து அங்கிருந்த அவ்விடையனை நோக்கி, "என் தாய் என்மேல் வெகுண்டு வருதலால், யான் அவள் கண்களிற் புலப்படாவாறு உன் பக்கத்துள்ள தயிர்த்தாழியை என்மேல் கவிழ்த்துச் சிறிது நேரம் என்னை ஒளித்துவை" என்று இரந்து வேண்டிக்கொண்டனர். அவ்வார்த்தைக்குத் ததிபாண்டனும் இணங்கி தன் தாழிக்

குள் பெருமானை வைத்து மூடிவிட்டுப் பக்கத்திலிருந்தனன். பிள்ளையைத்தேடிவந்த யசோதையார் அங்கிருந்த இடையனிடம் கண்ணன்வந்த செய்தியை உசாவ, அவன், "இங்கே கண்ணன் இல்லை" என்னவும், அவளும் 'வீடு வந்ததும் பிள்ளையைத் தண்டிப்பேன்' என்றுகூறி முறுமுறுத்துக்கொண்டு திரும்பினள். அவள் சென்றதும் ததிபாண்டன், கண்ணனை வெளியில் விடாமல், தான் மூடி வைத்த தாழியின்மேற் சடக்கென்று ஏறி உட்கார்ந்துகொண்டனன். அவ்விடையன் இங்ஙனம் செய்ய, உள்ளிருந்த பெருமான், தாய் சென்றுவிட்டமையால் தன்னை வெளியேவிடுமாறு அவ்விடையனை வேண்டினர். இடையனோ, ஜன்மாந்தரங்களிற் செய்த பெருந்தவப் பேற்றால் ஞானவானாயிருந்தமையால், ஸர்வேசுவரன் இவ்வுலகிலவதரித்து மிக எளியனாக யாவர்க்கும் அருள்புரிந்து வருங்காலத்தேயே தானும் பெரும்பேறடையக்கருதி, தம்மை வெளியில் விடுமாறு வேண்டிய பெருமானை நோக்கி, "எனக்கு தேவரீர் மோக்ஷமளித்தாலன்றி வெளியில்விட ஒருப்படேன்" என்று கூறித் தாழியை முன்னினும் பலமாக அழுத்திக்கொண்டான். உள்ளிருந்த கண்ணன், புன்முறுவல்கொண்டு, அவ்விடையனிலையை உணர்ந்தவராதலின், அவனுக்குப் பரமகிருபைசெய்யத் திருவுளங்கொண்டு, அவனை நோக்கி, "உனக்கு மோக்ஷமளித்துவிட்டேன்; இனி என்னை வெளியில் விடலாமே" என்றார். அதுகேட்ட இடையன் பெருமான் தனக்கருளிய பெரும்பேற்றுக்கு மகிழ்ந்தனனாயினும், வேறு சிந்தையுடையனாய், மறுபடியும் அத்தாழியைவிட்டொழியாது அதிகமாக அதனை அமிழ்த்திக்கொண்டு உட்காருவானாயினன். உள்ளிருந்த பெருமான் இடையனை நோக்கி "நீ கேட்டபடி முத்தியளித்த பின்பும் என்னை வெளியில்விடாது தாழ்ப்பதென்" என்று அவனை உசாவ, "ஸ்வாமி! தேவரீர் அடியேன்பாற் பரமகிருபை செய்வதற்கு உற்றதுணையாயுதவிய இத்தாழியைத் தனியேவிட்டு நீங்கேன்; ஆதலால் இதற்கும் யான் பெற்ற பேற்றை அளித்தாலல்லது இந்த சமயத்தில் உம்மைவிடுவது தவறாகும்" என்று அவ்விடையன் பெருமானதிசயிக்கக் கூறினன். அதுகேட்ட பகவான் "இவ்விடையன் நம்மைக் காரியங்கொள்ளுமாறென்னே" என வியந்து, தம் நிரேதுக பரமகிருபையால், அவன் விருப்பின்படி "தாழிக்கும் வீடுதந்தேன்" என்றரு

*

ளிச்செய்ய, ததிபாண்டனும் மூடிய அத்தாழியை நீக்கிக் கண்ணனை வெளியேறவிட்டு, தான் தன்றயிர்த்தாழியுடன் * மோக்ஷம் பெற்ற னன்—எனக் கண்டுகொள்க. இச்செய்தி, திருக்கோளூர்ப் பெண் பிள்ளை ஸ்ரீஇராமாநுஜரைநோக்கி, "இங்குண்டு என்றேனோ பிரக லாதாழ்வானைப் போலே; இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப் போலே" எனக் கூறிய வார்த்தையாலும், ஆசாரிய இருதயத்தும் அதன் வியாக்கியானத்துங்குறிக்கப்படுதலாலும் தெரியவருகின்றது. வில்லிபுத்தூராரும் "அருச்சுனனுங்--தாழிதனக்குமுன் வீடுகொடுத் தருள் தாளிணை யைப்பிடியா" என்று கூறினர். திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்காரும் திருவரங்கத்துமாலையில் (ருஙு)

"சிந்திக்க நெஞ்சில்லை வாயில்லை நாமங்கள் செப்பநின்னை
வந்திக்க மெய்யில்லை வந்திரு போதுமொய்ம் மாமலர்ப்பூம்
பந்தித் தடம்பொழில் சூழரங் காததி பாண்டனுன்னைச்
சந்தித்த நாண்முத்தி பெற்றதென் னோதயிர்த் தாழியுமே"

என்றபாட்டில் இவ்வினிய சரிதத்தைக் குறிப்பிட்டனர். "அரங்கா! பண்டங்களைக் கொள்ளுதற்கன்றி உன்னைச்சிந்தித்தற்கு உதவாத நெஞ்சையும் (கழுத்து), அவற்றை வெளியில் விடுதற்கன்றி உன்னு மங்களைச் செப்பற்குதவாத வாயையும், நின்னைத்தாழ்ந்து வந்திக்கத் தகாத மேனியையுமுடையதாய் அசித்தாயிருந்ததொரு பாண்டமும் வீடு பெறச்செய்தது உனது பரமகிருபை எனின், உண்மையில் உன் னைச் சிந்தித்தற்குரிய நெஞ்சும், உன் நாமங்கள் செப்பற்குரிய வா யும், வந்தித்தற் குரிய மேனியுமுடையராய்ச் சித்தாயிருக்கும் எம் போலியர்க்கு அது வாய்க்காததென்னோ" என்பது இப்பாட்டின் கருத்தாதல் காண்க. இச்சரித்திரத்தை, வேறுவிதமாக எம்பிரான் சதக முதலியவை கூறும். அஃதாவது:—

* "இந்த ஜீவனைச் சரீரமாகவுடைய நான் அசித்துக்களிற் பிரவேசித்து அவற்றின் நாம ரூபங்களைப் பிரகாசிப்பிக்கிறேன்" (சாந்தோக்கியம்) என் பது பகவத்வாக்கியமாதலின், தாழிக்கும் ஒருவகை யாத்மாவுண்டென்றும், அது மோக்ஷம் பெற்றதென்றும் கூறுவர்.

திண்ணமுடன் கோபாலா மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்கள் தீர்த்தும் போது
கண்ணில்லாத் ததிபாண்டன் மனையிற் புக்குக்
கண்கொடுத்துச் சாடியிற்போந் தொளித்துக் கொள்ளப்
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதா வல்லாற்
போகவிடே னெனச்சாடி மூடிக் கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
இறைவநா ராயணனே எம்பிரானே.

என்பது.

இவ்வினிய வரலாறுகள் புராணங்களிற் காணப்படாதனவாகித் தமிழ்நாட்டில் வழங்கி வருதல் கவனிக்கத்தக்கது. இவ்வாறு வடநூல்களில் காண்டற்கரியனவாய், தமிழ்நாட்டிற் பெரு வழக்குப் பெற்றுள்ள கண்ணன்சரிதங்கள் வேறு சிலவுமிருக்கக்கூடும். இவற்றுக்கு, வடநூலாதரவுகள் உள்ளனவாயின், அவற்றை அறிந்தோர் அறிவிக்க வேண்டுகிறேன். இராமபிரான் சரிதங்களிற் சிலவும் வடநூலாதரவின்றியே இவ்வாறு தமிழ்வழக்கில் உள்ளன. அவற்றைச் சமயநேர்ந்துழி எழுதுவேன்.

பத்திராசிரியர்.

---

உ

சிவமயம்.

# மாதவிவாதம்.

மரம், செடி, கொடி, புல்லு என்று வைத்தியநூலார் சிலர் வகுத்த தாவரவர்க்கம் நான்கனுள்ளே மாதவி என்பது எவ்வருக்கத்தின் பாற்படும்? மரவருக்கத்தின் பாற்படுமா? கொடிவருக்கத்தின்பாற் படுமா? ஈண்டைப்புலவர்களுள்ளே ஒரு சாரார் மாதவி என்பது மரவருக்கத்தின் பாற்படும் என்று வாதஞ்செய்வர். மற்றொருசாரார் மாதவி என்பது கொடிவருக்கத்தின் பாற்படும் என்று வாதஞ் செய்வர். இவருள்ளே மரவருக்கத்தின் பாற்படும் என்று வாதம்புரி

வோர் கந்தபுராணத்திலே வள்ளியம்மை திருமணப்படலத்துள்ளபாட்டுக்களுள்ளும் ஒன்றெடுத்துக்காட்டுவர். அதற்கு உரையுந்தீட்டுவர்.

### கந்தபுராணம்.

ஆதிதன்மொழி துணைவிகேட் டஞ்சியே யையர்க்கு
நீதி யன்றுதண் பனைமட லேறுத னீரிம்
மாத வித்தருச் சூழலின் மறைந்திரு மற்றென்
காதன் மங்கையைத் தருவனென் றேகினன் கடிதின்.

மாதவி என்பது குருக்கத்தி. "அதிமுத்தம்வாசந்திகுருகுநாகரியிவை குருக்கத்தியாகும்" என்று பிங்கலநிகண்டுகாரரும், "குருகுநாகரி வாசந்திமாதவி குருக்கத்திப்பேர்" என்று சூடாமணிநிகண்டுகாரரும் கூறுவர். ஆரியநிகண்டு காரருள்ளே அமரசிங்கர் என்பவர் மாதவியின் பரியாய நாமங்கள் பலகூறி "மாதவீலதா" என்றே முடிப்பர். லதா என்பது தமிழ்மொழியிலே இலதை என்று தற்பவமாக வழங்கப்படும். இலதை - கொடி.

### அமரகோசம்.

அதிமுக்த: புண்ட்ரக: ஸ்யாத் வாஸந்தீ மாதவீலதா ॥

இங்கே கூறப்பட்ட பெயர்கள் நான்கு; அவை அதிமுத்தம், புண்டிரகம், வாசந்தி, மாதவி என்பன. அதிமுத்தம் என்பது பிங்கலநிகண்டிலே அதிகம் எனவும், முத்தம் எனவும் இருபெயராக்கி அச்சிடப்பட்டன. அதிமுத்தம் - முத்தர்களை வென்றது. புண்டிரகம் - புண்டிரதேசத்திலே முளைத்தலுடையது. வாசந்தி - வசந்தகாலத்திலே மலர்விரிதலுடையது. மாதவி - மது என்னும் பருவமாசங்களிலே மலர்விரிதலுடையது. மது - சித்திரை வைகாசி.

காளிதாசமஹாகவி செய்த புட்பபாணவிலாச காவியத்துக்கு உரைகூறிய உரையாசிரியரும் மாதவியைக்கொடி என்றே கூறுவர். இறையனாரகப்பொருளுரையும், சிலப்பதிகாரமும் மாதவியை எங்ஙனம் கூறும்? அவைகளும் கொடிஎன்று கொண்டுதான் கூறும். "கடிக்குருக்கத்திக் கொடிப்பிடித்து" என்பது இறையனாரகப்பொருளுரை. "கோதை மாதவி கொழுங்கொடியெடுப்ப" என்பது சிலப்

பதிகாரம்; ஊர்காண்காதை, திருவானைக்காப்புராணம், தேவாரம் முதலியன எங்ஙனம் கூறும்? அவைகளும் கொடியென்று கொண்டு தான் கூறும்.

### திருவானைக்காப்புராணம்.

கூர்த்தநதிப்பனிமுல்லை கோதையர்தமியலொளியிற்
சேர்த்தநகைமுகையொப்புச் சிவணுதமானத்தால்
ஆர்த்தவிதழ்நெகிழ்ந்துடைவவவர்செயற்கையொளிநகைக்கு
நேர்த்திலமென்றுடைந்தொழிவ நெடுங்கொடிமாதவிமுகையும்.

### திருமாணிகுழித் தேவாரம்.

நேமியனெடுதிருமாலுமுணராவகை நிமிர்ந்தமுடிமேல்
எமலவுதிங்கண்மதுமத்தமிதழிச்சடையெம்மீசனிடமாம்
மாமலவுமல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திகுரவின்
ஊமலவுபுன்னைவிரைதாது மலிசேருதவிமாணிகுழியே.

இங்ஙனமே வடமொழியிலுந் தென்மொழியிலும் பலநூல்கள் மாதவி என்பது கொடிவர்க்கத்தின் பாற்படும் என்று கொள்ளுமாறு வெளியாகக் கூறுகின்றன. ஆதலால் யாமும் அதனைக் கொடிவருக் கத்தின் பாற்படும் என்றே கொள்ளுதும். அங்ஙனமாயின்; மேலே வந்த "மாதவித்தருச்சூழலின்" என்னும் கந்தபுராணத்தோடு முரணாதோ? எனின்; முரணாது. என்னை! அதன்பொருள் வேறுவகை யாகக் கூறப்படும். என்னையெனிற் கூறுதும். மாதவித்தருச்சூழ லில் - மாதவிக்கொடி படர்ந்து மூடியிருக்கும் மரச்சூழலில் எனவே பொருள்கொள்க. இப்பொருள் கொள்ளுங்கால் மாதவியை மரம் என்பார் வாதம் கிரர்த்தகம் என்னும் நிக்கிரகத்தானமாயத் தூரம் போய்விடும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# சிறுவர்க்குரிய உபந்நியாசங்கள்.

## நன்னடக்கை.

𑌆𑌚𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌸𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌚𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃॥
𑌆𑌗𑌮𑌾𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥
𑌆𑌚𑌾𑌰𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇॥
𑌆𑌚𑌾𑌰𑌾𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌹𑍍𑌯𑌾𑌯𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑌾𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂॥
𑌆𑌚𑌾𑌰𑌾𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌚𑍇𑌹 𑌚॥

சிறுவர்களே? இந்தப்பக்கத்தின் றலைப்பிலிருக்கிற வார்த்தைகளை நீங்கள் வாசிக்கமுடியாது. ஏனெனில், அவைகள் ஸமஸ்கிருத வார்த்தைகள். உங்களுக்கு ஸமஸ்கிருதம் தெரியாது. ஒருக்கால், கொஞ்சம்பெரியவராகும்பொழுது அதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு இந்துக்குழந்தைக்கும் சிறிதுஸம்ஸ்கிருதந்தெரியவேண்டும்; ஏனென்றால், உங்களுடைய திவ்வியமான வேதபுராண இதிஹாஸகிரந்தங்கள் அப்பாஷையிலேயேதான் எழுதப்பட்டிருக்கின்றன. பூர்வீக இருஷிச்ரேஷ்டர்கள் அப்பாஷையைத் தான்பேசிவந்தார்கள். மேலே எழுதப்பட்டிருப்பன உங்களால் வாசிக்கமுடியாதாகையால் அவைகளின் பொருளை நான் உங்களுக்கு விளங்கச்சொல்லுகிறேன்.

பகவத் பக்தனாக நாமிருக்கவேண்டுமானால் நம் நடக்கையில் மிக்க பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்று இவ்வார்த்தைகள் கற்பிக்கின்றன. நன்னடக்கையே எல்லாவற்றிலுஞ்சிறந்தது. நன்னடக்கையே தருமம். தருமமே மதம்-மதம் அல்லது தர்மமே நம் வாணாளை அழகுபடுத்திச்சிறப்பிப்பது. நன்னடக்கையினாலேயே நாம் சந்தோஷமாக வாழ்கிறோம். இம்மையிலும் மறுமையிலும் நற்பயன்களுதவுவதும் நன்னடக்கையேயாம். இத்தகைய நன்னடக்கையைப் பற்றியேதான் உங்களுக்குச்சொல்ல விரும்புகின்றேன். உங்களைச் சந்தோஷிக்கச்செய்வதும், துன்புறச்செய்வதும் சிலபொருள்களேயாம் என்பது நீவிர் அறிந்த விஷயம். சிலவேளைகளில் நீங்கள் கோ

பிஷ்டராயும், சில சமயங்களில் சொல்லியபடி நடக்காத முரடராயுமிருக்கிறீர்களாயினும் உங்களில் அநேகர் நல்லவராகவேயிருக்க முயலுகிறீர்கள். ஒருக்கால், நீவிர் கோபங்கொண்டபொழுது அப்படிச் சினந்துவிட்டமைபற்றிப் பின்னல் பெரிதும் வருத்தமுறுகிறீர்கள். மிகவும் அமைதியாயிருந்திருக்கவேண்டுமென்றும் விரும்புகிறீர்கள். உங்களுடைய கீழ்ப்படியுந்தன்மையில்லாமையைப்பற்றி நீங்கள் அடிக்கடி வருத்தப்படுகிறீர்கள். நன்னடத்தையைப்பற்றிக் கற்பிக்கும்படியான கதைகள் பலவற்றைக் கூறுகிறேன். இக்கதைகள் உங்களை நல்லவராக்கும். உங்களது நல்வழிக்கான மார்க்கங்களையும் அவைகள் உங்களுக்குணர்த்தும். இத்தகைய கதைகள் உங்களது சிறந்த வேதப்புத்தகத்திலுள்ளன. நீங்கள் மிகச் சிறிய குழந்தைகள்; இக்கதைகளும் படிக்கச்சாத்தியமானதுமன்று; இக்கதைகளில் நீண்ட கடினமான வார்த்தைகளிருக்கின்றன. இவைகளை எளிய நடையில் குறுக்கித் தெளிவாய் எழுதினுல் நீங்களே அவற்றை அடிக்கடி படித்தறிந்துகொள்ளவியலும்.

பண்டைக்காலங்களில் நற்குணம் வாய்ந்த மனிதரும் ஸ்திரீகளும் எவ்விதம் தம் வாழ்நாள்களைக் கழித்தனர் என்பது இக்கதைகளினல் நன்கு தெரியலாகும். இக்கதைகளில் சிறு குழந்தைகளின் நற்குணங்களும் அவர்கள் எல்லாரிடத்தும் எவ்வளவு சாந்தசிலராயிருந்தார்களென்றும், அவர்கள் பரமேச்வரனையும், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவையும், பெருந்தேவர்களையும் எப்படி நேசித்தார்களென்பதும், கடவுளர்கள் இச்சித்தவண்ணமாய் அவர்கள் எப்படிச்செய்தார்கள் என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களது நன்னடக்கையைப்பற்றி முன்னர் அறிந்து நாமும் அவர்களைப்போலவே ஆக முயலுவோமாக.

இவ்வழகிய உலகத்தினையும், பிரகாசமான சூரியகாந்தியையும், குளிர்ந்த விருக்ஷங்களையும், முதிர்ந்த கனிகளையும், நம்முணவிற்குரிய தான்யவகையினையும், நமக்குபயோகமாயுள்ள பிராணிகளையும், நமக்குச் சுத்தமான இனிய பாலைத் தருகிற சாந்தமான பசுவினையும் நீங்கள் அறிவீர்கள்! இவைகளெல்லாம் நமக்குக் கடவுளால் கிருபைகூர்ந்து அளிக்கப்பட்ட பெருங்கொடைப் பொருள்களாம். அவை

களால் நாமடையும் பயன்களுக்குத் தகுந்தாற்போன்ற நன்மையினை நாமும் அவற்றிற்கு அளித்தலும் வேண்டாவோ? நாமவைகளுக்கு யாது கொடுக்கமுடியும்? அவைகளிடத்தில் வேண்டிய பொருள்களெல்லாமிருந்தாலும், நாமவைகளுக்கும் நம்மாலானது சிறிதுகொடுப்போம். நமது நற்செய்திகளுள், நல்லெண்ணங்கள், நல்வார்த்தைகளே நாம் அவைகளுக்குக் கொடுக்கக்கூடிய பொருள்களாம். இவற்றைத்தான் ஆசாரமென்று சொல்வது. இப்பதம் பொருளாவது சிறிது சிரமந்தான். ஆனால், அதன் அர்த்தம் நல்லவை என்பது தான். பிறருக்கும் நமக்கும் ஒருசேரப் பேரின்பத்தைக்கொடுக்கும்படியான நன்னடக்கையே என்று பொருள் கூறலாம். நற்செய்கைகள் பலவகைப்பட்டன. உங்களைக்காட்டிலும் சிறியோரிடத்திலும், உங்களில் வலிகுறைந்தவரிடத்திலும், உங்களை யொத்தவயதினரல்லாத உங்களுடைய சிறிய நண்பரிடத்திலும், உங்களது நற்செய்கையைக்காட்டவேண்டும். மிக்க ஏழைகளுக்கு அல்லது, நீங்கள் செய்வனவற்றை அறியாதவர்களுக்கும் நீங்கள் நல்லவற்றைச் செய்யமுடியாது. உங்களுடைய தாய்தந்தையர் ஆசாரியர் வயது முதிர்ந்தோர், அரசன் முதலியோர்களுக்கும் நீங்கள் நல்லன செய்தல் முடியும்.

அதி ஸத்ய ஸந்தர்களாயும் மிகக் கீழ்ப்படிதலுள்ளவர்களாயும், மிகச்சாந்தசீலராயும், அதிஸ்வயநலங்கருதாதவராயு மிருக்கத்தகுந்த நற்காரியங்கள் பலவற்றை நாமே செய்துகொள்ள வியலும். எக்காலத்தும் பொய்யைத்தள்ளி மெய்யைத் தழுவவும் பிறிதொன்றிற்கும் தீங்குபுரியாதிருக்கவு மிருக்க நாம் முயற்சிக்கலாம்.

"பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்."

நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டிய நற்காரியங்கள் இவைகளேயாம். பிறகு ஈச்வர ஸம்மதத்திற்குவந்ததாய் நடக்கவேண்டிய நல் நடத்தை யொன்றுமுண்டு. நாம் செய்யும் எக்காரியங்களினும், உத்தியோகத்திலும், விளையாட்டிலும் ஈச்வரனைத் த்ரிகரண சுத்தியுடன் ஸ்மரிக்கவேண்டும். அவருக்குத் தொண்டுபுரிய முயற்சிப்பதிலும், ஈச்வரனுக்கே செய்யும் பணிவிடைகளில் மனப்பூர்த்தி

யாய்க் கலந்து செய்வதிலும் எப்போதும் பிரீதியாயிருக்கவேண்டும். நீங்கள் தக்க பருவமடைந்து பெரியவராகும்போது பகவத்கீதை என்னுமோர் அழகிய ஸத்க்ரந்தத்தைப் படிக்கலாகும். நாம் செய்யும் எக்காரியங்களையும், நாம் உண்ணும் எவற்றையும் நாம் கடவுளர்க்கு அர்ப்பணம் செய்யும் எவற்றினையும், அந்நியர்க்கு நாம் கொடுக்கும் கொடைகளையும், நாம் தியாகம் செய்யும் எவற்றையும், பகவானுக்கே அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும், இதுதான் பகவதாராதனை யென்றும், இதுதான் பக்தியென்றும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தமது பகவத் கீதையில் கூறுகின்றார். நற்செயல்களைப் பற்றிய இத்தகைய அருங்கதைகள் பலவற்றைஇனி நாம் படிப்போம். பலவீனர், கதியற்றவர் முதலியோர்களுக்குச் செய்யக்கூடிய நற்காரியங்கள், எல்லாமனித ஜீவவர்க்கங்களுக்கும் செய்யக்கூடிய நற்காரியங்களைப்பற்றியும் சொல்லவேண்டிய விஷயங்களிலிருந்து நாம் தொடங்குவோம். உலகத்தின் மனிதர்கள், ஸ்திரீகள், சிறியகுழந்தைகள், பிராணிகள் புழுக்கள் முதலான ஸகல ஜீவவஸ்துக்களுக்கும் நாம் உதவிபுரிய முற்படவேண்டும். எல்லாப் பொருள்களையும் நேசிப்பதும், ஜீவப்பிராணி யாதாமொன்று வருந்தும்போது நாமும் வருத்தமடைவது மேலானது. பிறவுயிர்க்கு ஒருக்காலும் துன்பஞ் செய்யாமையே மேலானது.

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணா செய்யாமை தலை."

இம்மாதிரியான பிறவுயிரின் மேலுள்ள நேசம் தான் கருணைகடாட்சம் என்னும் சிறந்த சாரமாகும்.

கருணைகடாட்சம் அல்லது அருளுடைமை என்னும் நீண்ட வார்த்தைக்கு நேசமும் பரிதாபமும் என்று அர்த்தமாகும். வருத்தமுறுகிற எந்தப்பிராணியினிடத்திலாவது ஒரு சிறுவன் இரக்கப்பட்டு அதற்கு ஏதேனும் சிறிது உதவிசெய்ய முயற்சித்தால், அவன் தான் அருளுடைமை என்ற ஆசாரத்தையுடையவன் என்று சொல்லப்படுவான். வருத்தமுறுபவர்பால் பரிதபித்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யுஞ் சிறு குழந்தையோ, வயதுவந்தமனிதனோ, மனுஷியோ, அவன் அல்லது அவள் அருளுடையார்கள்

என்று சொல்லப்படுவார்கள். விச்வாஸமாய் நோயாளிகளுக்குரிய வற்றைச் செய்தும், வலியற்றவர்களுக்கும் உதவி செய்தும், பசியாளர்களுக்கு முகமலர்ந்து அன்னமிட்டும் வருவோமானால் நாமேதயாளசிலர் ஆவோம். பட்சமுள்ள அற்பகாரியங்களும், மதுரமானசொற்களும், மேலுள்ள ஸ்வர்க்கத்தைப்போலப் பூமியையும் சகல இன்பங்களையும் ஒருங்கே அனுபவிக்கும் மோக்ஷவீடாக்குகின்றது.

## COMPASSION.

## அருளுடைமை.

### ரந்திதேவன் என்னும் நல்லரசன் சரிதை.

—:o:—

தன்னுயிர்போல் மன்னுயிரிடத்து இரக்கங்காட்டியருளிய ஒரு மகாராஜனின் அழகிய சரித்திரம் பழைய கிரந்தமொன்றில் சொல்லப்பட்டிருப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒருகாலத்தில் ரந்திதேவனென்னும் மன்னனொருவனிருந்தான்; அவன் ஸங்க்ருதி என்பவனுடைய குமாரன். எப்பொழுதும் வேண்டிய திரவியமும் ஆகாரமும் ஏழைகளுக்குக் கொடுத்துவந்ததினால் அவன் நல்ல அரசன் எனப் பேர்பெற்றனன். பசியுள்ளவர்களுக்கு ஆஹாரம் போட்டுக் காப்பாற்றவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் பிறருக்குஅளிப்பதுடன் சில வேளைகளில் அப்படிச்செய்வதில் தானுந் தன்னில்லாளுங்கூட உபவாஸமாயிருப்பதுண்டு.

ஒரு காலத்தில் அம்மன்னன் தானும் தன்னுடனிருப்பவர்களும் அநேக நாட்கள் ஆஹாரமின்றி மிகவும் பசியுற்றிருந்தார்கள். யாரோவொருவர் கொஞ்சம் ஆஹாரமும் கொஞ்சம் இனிய பாலும் நெய்யும் கோதுமையும் தண்ணீரும் அவர்களுக்குக் கொணர்ந்தார்கள். அவ்வாஹாரத்தையுட்கொள்ள அவர்கள் உட்காரப்போகையில் பசியுற்றிருக்கும் பிராமணனொருவன் அவர்களிடையில் திடீரெனத்தோன்றித் தனக்கு ஆஹாரங் கொடுக்கும்படி வேண்டினன். ரந்திதேவன் அந்த பிராமணனுக்கு ஆஹாரமளிக்கப் பிரியமுற்ற

வனுய் அவனுக்கே முதலில் உணவளித்தனன். உணவுண்ட பிராமணன் சென்றபிறகு பாக்கியிருந்த உணவைத் தங்களுள் ஸரிபாகமாகப்பகிர்ந்தான். அவன் தன்னுடைய பாகத்தை அருந்த உட்கார்ந்ததுதான் தாமஸம். பசியுள்ள ஆத்திரனொருவன் தனக்காஹாரம் கேட்டான். ரந்திதேவனே அப்பொழுது தான் ஆஹாரங்கொள்ளாவிட்டாலும், அவனுக்குக் கொஞ்சம் ஆஹாரங்கொடுத்தான். ஆத்ரனும் சிறிதுணவருந்தித் தன்வழிச்சென்றான்.

மிஞ்சியிருந்த சொற்ப ஆஹாரத்தை ரந்திதேவன் உண்ணவாரம்பியாததற்கு முன்னமேயே நாய்க்கூட்டமொன்றுடன் ஒருமனிதன் வந்து தனக்கும் ஏதாவது ஆஹாரம் வேண்டுமென்று வேண்டினான். வேண்டலும் இந்நல்லரசன் எஞ்சியிருந்த ஆஹாரமுழுவதையும் அம்மனிதனுக்கும் அவன் நாய்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்த பின்னர் ஒரு கிண்ணம் தண்ணீர்தான் கடைசியில் பாக்கியிருந்தது. பசியாறின நாயும் மனிதனும் தம்வழிச்சென்றபிறகு, தாஹத்தால் மிகுதியும் தளர்வுற்றிருக்கிற அரசன் கடைசியில் பாக்கியிருக்கிற தண்ணீரை யருந்தலாமென்றெண்ணினான். அதே நிமிஷத்தில் ஒரு எளிய பிச்சைக்காரன் எனக்கு நாவறண்டு போகிறது, மிக்க தாகமாயிருக்கிறது, தண்ணீர்வேண்டுமென்று மன்றாடினான். அப்பிச்சைக்காரன் ஜாதிப்ரஷ்டனாகிய நீசனையும் களைத்துப்போன தௌர்ப்பாக்கியனையுமிருந்தான்.

உதாரகுணமுள்ள இவ்வரசன் தான்சாப்பிட எண்ணியிருந்த நீரை அவ்வெளிய பிச்சைக்காரனுக்கீந்தான். அவ்வெளியவன் மிகவும் சுலபமாய் நீரை அருந்துவதற்குதவியாய் அப்பாத்திரத்தைத் தன் கையினால் பிடித்துக்கொண்டிருந்த அரசன் "பசி தாஹமொன்றும் எனக்குக் கிடையவே கிடையாது, மற்றவர்களுடைய துன்பத்தையும் துக்கத்தையும் நான் பொறுமையாய்ப் பொறுக்க கிருபாநிதியாகிய ஹரி கடாக்ஷிக்கவேண்டுமென்றும் மற்றவர்களுடைய கஷ்டங்களில் ஒத்தாசை செய்து ஸந்தோஷிப்பாக எனக்கு மனவலி, கடவுள் கொடுக்கவேண்டுமென்றும் மனங்கசிந்து கூறினர்.

பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்ரர்களிடத்தும் ஹீந ஜாதிகளிடத்தும் நாம் எவ்வளவு தயையோடிருக்கவேண்டுமென்றும், எல்

லாவற்றிற்கும் எங்ஙனம் நாம் உதவிபுரியவேண்டுமென்றும், ரந்தி தேவனால் நாம் நன்கறிகிறோம். இந்த நல்ல ரந்திதேவன் செய்த விதமாய் நம்முடைய எல்லா ஆகாரத்தையும் அந்யருக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் பசியுற்றவர்க்குச் சிறிதேனும் அடிக்கடி உதவ லாம். கஷ்டப்படுவோரிடத்தும் நோயுற்றவரிடத்தும் சிறு குழந்தை கள்கூடத் தங்களுடைய அன்புள்ள செய்கைகளை அடிக்கடி செய்யக் கூடியவர்கள். நம் சொந்த மனிதராயினும் அந்யராயினும் பணக் காரராயினும் ஏழையாயினும் பிராமணராயினும் ஜாதிப்ரஷ்டராகிய புலையராயினும் பாலரிடத்தும் நாம் அன்பும் விசுவாஸமும் உடைய ராயிருத்தல்வேண்டும். எம்மனிதன் நம் உதவியை வேண்டினனாயி னும் அத்தகையோனை நம் ஸஹோதரனாகப்பாவித்து அவனுக்குதவி புரியவேண்டும்.

## 2 உபகாரம்.

கரியசிற்றெறும்பொன்று தன்னால் தூக்கவாவது அசைத்துரு ட்டவாவது முடியாத பெரியதொரு கோதுமைத் தான்யத்தைக் கண்டது. ஆதலின் தன்னெதிர்ப்பட்ட மற்றொன்றினை அத்தான் யத்தைத் தன்வளைவரையிற் கொண்டு சேர்க்க உதவிபுரியுமாறு மன் றாடிக்கேட்டுக்கொண்டது.

எனக்கு என்வேலை தலைக்குமேலிருக்கின்றது உனக்கு அத்தான் யம் தேவையானால் நீயேதான் அதை உருட்டி உன்வளைக்குக்கொண் டுய்க்கவேண்டுமென்றது. இப்படிக் கோபத்தோடு ஸ்வயநலங்கருதி யே பதில் சொல்லிக்கொண்டுபோய் ஓரிடத்தில்ஸாவகாசமாய்ப் படுத் துறங்கலாயிற்று.

அப்பொழுதுதான் அவ்வழியே போய்க்கொண்டிருந்த மற் றொரு சிற்றெறும்பு தன்னுடைய ஸஹோதரன் உதவிவேண்டுவதை யறிந்து இரக்கப்பட்டு அது வைத்துக்கொண்டிருந்த சுமையை வளை கொண்டு சேர்ப்பதில் வேண்டிய ஒத்தாசையைப் புரிந்தது. இதைக் கேட்க நேரிடும் இளஞ்சிறுவர்கள்யாவரும் இக்கதையினால் நற்பயன் களையடைய முயற்சிசெய்யக்கடவர்கள். நற்புத்தியையடைய மன முள்ள சிறுவர்கள் நல்ல சுபாவமுள்ள மற்றைய சசோதர எறும்

புக்கு உதவிய நல்லெறும்பினால் நற்புத்தியடையக்கடவர். மேலும் சிறு பிராணிகளை ஒன்றுக்கொன்று பக்ஷமுள்ளவைகளாய் நடந்து கொள்ளுமானால் குழந்தைகள் உண்மையாய் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே அமையுமன்றோ?

(இன்னும் வரும்.)

சுப்பிரமணிய ஐயர்.

---

உ

குமரன்றுணை.

# உள்ளத்துணர்வு.

(முற்றெடர்ச்சி.)

அகம் என்பது ஞானமுதிர்வுதலையெடுப்பபேருணர்வு நின்று திருவருட்சத்தியால் தன்மயமாய் நிற்கும் இடம் அகமாகும். தித்தித்தல்-இனித்தல். எவ்வகைச்சுவையினும் தேன்-தையிலவடிவாகவும் இடையறாச் சுவைதருவதாயுமிருத்தலின், தேனே என்றனர். அப்பொடுபெய்தவுப்புப்போல சிவனும் சீவனுந்தானுந்தன்மையெய்தி அபின்னமின்றியுண்மை காணுதலினால், தேனேயென உவமையாகுபெயராக்கிக்கொண்டனர். நாவழிநுகருந்தேன் கண்டமாத்திரையே யாகலின், அதுசிறும்பேரும் இன்றென்பதுபோதர சித்தத்துட்டித்திக்குந்தேன்என்றதென்க. ஆன்றோர் முடிபுகூறுமிடங்களிற்றான் உண்மைதோன்றும்; என்னுள்ளத்துள்ளிருக்குமின்பவெள்ளப்பெருக்கே, "சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே" என்ற பெரியார் வாக்கியங்களெல்லாம் இரகசிய விடமாகும். அபக்குவவான்மாக்கட்கு தெளிவுபொருந்தல் இயலாத காரியமாகும். ஓர் இளம்பருவத்தன் தான்சிற்றின்பம் நுகருங்காலத்து ஓர் இளம்பருவமடந்தையினது, உருவாதிகளையேநோக்கி நோக்கி விரகம் அதிகரித்து அம்மடந்தையைத்தழுவத்தனதுள்ளம் விரும்பஅறிவும்அதன்வசப்பட்டு பே

ரறிவைமறைத்து விஷயாதிகளிற்செலுத்தியுள்ளம் உவத்தலைச்செய்தல்போலப் பேரறிவும், பரிபக்குவகாலத்து உள்ளத்தைத்தன்பால் இழுத்துநல்லுண்மைதெரிவித்து சிற்றுணர்வைத்தன்மயமாக்கி நிர்மலப்பட்டதாய், சிவச்சீவத்தன்மைதோன்றாமல், தானே அதுவாய் கருவிகரணமடங்கி, ஐக்கியத்தன்மையெய்துதல் பேரறிவின் வினையாகும். (வினை+தொழில்.)

"தனக்கோரிலக்கணத்தைத்தான்கூறுறென்னே
எனக்கைந்திலக்கணமுமேனுரைப்பீரென்னே."

என வீட்டுநூல்முழங்குவதும் நாம் அறியத்தக்கது. கூத்தாடுபவன் தன்னை அரிச்சந்திரனாகவும், சந்திரமதியாகவும் அலங்காரஞ்செய்துகொண்டு ராசரீகத்துக்குத்தக்கபடி உரையாடி நடிக்கினும் உள்ளபடியே அவன் அரிச்சந்திரனுஞ்சந்திரமதியும் ஆகான். பாவனைமட்டும் அவர்களைப்போலக் காட்டுகின்றான். அதுபோலவே, என்னது நின்னது என்னுடைமை நின்னுடைமை எனவுரிமை பாராட்டிக்கொண்டாடினும் தமக்கோர் சுதந்தரமும் எஜமானத்தானமும் பெறுனென்க. எவ்வகைப்படிப்பினும் மனமிறக்கக்கற்றல் ஒருவகைப்படிப்பாகும். அஃது, ஏனையவைகளைப்போறலன்று. விசேடவிழுமையெய்தியதாகும். அறிவு நூலாய்ந்து படித்தலுக்குப் பாலுண்குருகை உவமம் ஆக்கல் பண்டைப்புலனெறிவழக்கென்க.

"பற்றுவதேபற்றிபணியறநின்றொன்றுணர்ந்து
நிற்பாரேநீணெறிச்சென்றார்."

என்ற குமரகுருபரரின் அருமைத்திருவாக்கும் ஈண்டு ஊகிக்கத்தக்கதொன்றாம். அன்றி கம்பநாட்டாழ்வாரும், ஞானிகளுணர்வினென்றாய் - என்கின்றனர். உள்ளத்துணர்வு அமைதிபெற்று தங்கிலையுறுமேல் அஃதே முடிந்தபொருள்என்பதுதான் தெள்ளியார்திறனமை கூற்றாம்.

"எல்லாமும் வலதிந்த மலமாயை ஏழையாம் என்னலடக்க வசமோ" என நம் தெய்வத்திருவருளாளராகிய ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகளும் கூறினராவர். எவ்வடக்கத்துள்ளும் மனவடக்கமே கைத்துணையாற் கடனீந்துவதன்னவோரரும்பெருஞ்செயலாகும்.

தவமிழைத்தல் முதலியனவெல்லாம் மனவொற்றுமைபெறற்பொருட்டேயாகும். அகம், புறம் என பகை இருவகைய. அகப்பகைக்குப் பேராற்றல் அதிகமாகும். புறப்பகை யொரோவழி நீங்குநிலைமையதாகும். "புறப்பகைகோடியின் மிக்குறினுமஞ்சார் அகப்பகை யொன்றஞ்சிக்காப்ப" என்ற பெரியார் அருமை வாக்கும் ஈண்டு யூகிக்குந்தகைமையதாகும். அகப்பகை, சிதைதல் உறுவதுக்கு அரியதொரு தீவிரஞானத்துணைபெறல் வேண்டுவதவசியமாகும். ஆகவே இதுகாறுங்கூறிய விஷயங்களான் மனத்தூய்மை பெற்றிருக்க முயலவேண்டுவது முக்கியமானதொரு காரியமென்க.

> செடுக்கவல்லதுங் கெட்டவர் தங்களை
> எடுக்கவல்லதும் இம்மனம்;

என்று கூறிப்போந்த நமது ஸ்ரீசிவப்பிரகாசத்தின் றெள்ளிய கருத்தும் நுணுகி உணரற்பாலதாகும். உள்ளத்தினிலக்கணத்துக்கு உணர்வே சம்பந்தமுடையதென முற்கூறியவைகளை நெடுகக் கவனிக்கவேண்டியதொன்றாகும். உள்ளம் தானம் எனவும் உணர்வு தானி யெனவும் அமைத்துக்கொள்ளல் வேண்டும், சைவசித்தாந்த பரமாசாரிய பரஞ்சோதி விருடியாரும் "உள்ளமெனுங் கூடத்திலூக்கமெனுந்தறிநிறுவி" என்கின்றனர். உணர்வின தியக்கமில்லாவிடின் உள்ளம் அசையா நீர்மைய. தண்ணீர்போல தனக்கோராற்றலில்லாதிருக்குமென்க. உள்ளமெனுங்கூடம் என்றதனால் தானம் எனமுன்னர்யாமும் தாபித்ததாகும். உள்ளத்துள் உணர்வு ஊன்றுதலடைந்து யதார்த்த நிலைமையை நிச்சயித்துச் சொரூபவுருக் காணும்போதுதான் பேரின்பம் வாய்க்குமென்ப.

> முற்றத்துறந்தார்க்கு மெய்யுணர் விற்றேன்றுவதேயின்பம்
> இறந்தவெலாந் துன்பமலாதில்.

என்ற ஆன்றோர் கூற்றும் ஆராயத்தகுவதொன்றாகும். இன்பம்மெய்யுணர்வின்கண்ணதே என்பது அனுபவவாளரின்தெளிவு. மெய்யுணர்வின்மயமாக சனிக்கு மின்பமேயின்பமாகும். அவ்வின்ப வாயிலாகக் காட்சி பெறப்படுமென்க. பேரறிவாளரனைவரும், சுருதி, யுக்தி, அனுபவம் எனமுத்திறத்ததாய்ப்பாகுபாடு செய்ததனுள், அனுபவம்என்பது கடைப்பாகத்தமைந்தது. அனு

பவமில்லாதாயின் முன்னையவிரண்டானும் ஒருசிறிதும் பயனில வாய் முடிந்துவிடும். எக்கருமங்களினும் அனுபவிகளே நிலைதெரிந் தொழுகுபவர்களாவர். அவற்றினும் சிவானுபவம் சீரும் பேரும் எய்தியதாகலின், இஃது அவசியமுள்ளதெனப் பெறப்படுகின்றதெ ன்க. "வருத்தம் பிள்ளைபெறுப் பேதையறிவாளோ" என்பது நியா யமான உரையாகும். சுருதியோடு நிற்பவர்சிலர். யுக்தியோடு நிற் பவர் சிலர். அனுபவத்தோடு நிற்பவர் சிலர். இம்மூன்றுமொருங் கே கொண்டு நிற்பவர் சிலர். ஆகவே, மூவகைச் செய்லும் ஒன் ருேடொன்று தொடர்புடைய தென்பது இதனுல் விளக்கப்பட் டதாகும். உள்ளமும் உணர்வும் அனுபவத்தோடு ஒன்ருந்தன்மை பெறுங்காலத்துத்தான், அற்புதக்காட்சி கண்டேன் கண்டேன்என, பெரியார் திருவாய்மலர்ந்தருளுவது. சொரூபநிலைகாணுது ஆடினும் பாடினும் அஃது ஒரு புண்ணியமாத்திரையன்றி முடிபான ஒருவகை யைக்காட்ட வியலாதென்க.

பாடிப்படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடியெனை யடிமை சேர்த்தாய்

என்றருளிய தெய்வப்பெரும்புலமையாளர், தெள்ளத்தெளிந்த பெரிய அனுபவமுளராதலின், ஆண்டாண்டு குறிப்பால் விளக்கு கின்றனர். "சித்தமிசைகுடிகொண்ட வறிவான தெய்வமே" எனவும், "எனதுள்ளங்கவர்கள்வன்"எனவும், "உள்ளத்தினுள்ளே யொளித்தி ருக்கும் பேரமுதே" எனவும், குறிப்பான் மெய்ம்மை நிலைகாட்டி யனவெல்லாம் ஆழநினைக்கத்தக்கதாகும். மெய்யுணர்வோராயினும் ராஜஸ, தாமஸ, குணங்கள் நடுவில் தோன்றிமயக்கிவிடுவதியல்பு. மயக்கவே மெய்யுணர்வு மறையப்பட்டு தன்னிலை தோன்ருதாய் விடு மென்க. கம்பர் பம்பை வருணனை கூறுமிடத்துப்,

காசடை விளக்கிய காட்சித் தாயினு
மாசடை பேதமை யிடைமயக்கலா
லாசடை நல்லுணர் வனையதாமெனப்
பாசடை வயின்ருறும் பரந்தபண்பது.

என்கின்றனர். அதாவது அப்பொய்கை மாசு அடை பேதமை— குற்றம்பொருந்திய அவிச்சையானது, இடை—நடுவில்நின்று, மயக்

கலால்—மயங்கச்செய்தலாலே, ஆசுஅடை—அற்பத்தன்மையை (இடையிலே) அடைந்த, நல்லுணர்வு—நல்லமெய்யறிவை, அனையது ஆம்என—போன்றது என்னும்படி, காசுஅடை—முத்துக்கள் தன்னுள்) பொருந்தியிருத்தலை, விளக்கிய—(வெளியேநின்றுகாண்போர்கு) விளங்கச்செய்த, காட்சித்து ஆயினும்—(மிகத்தெளிந்த) தோற்றத்தையுடையதாயிருந்தாலும், பசுஅடை—பசியஇலைகள், வயின்தொறும்—இடையிடங்கள் தோறும், பரந்த—பரவப்பெற்ற, பண்பது—தன்மையுடையது. (எ-று.) உணர்வுக்கு மயங்குகின்ற சுபாவம் அமைந்ததாகும். மயங்காது ஒரே படித்தாய் உள்ளத்தோடொன்றி நன்னிலையுறற்கே தீர்த்தம் மூர்த்தம் முதலிய சாதனங்களை முன்னர்ச் செய்துகொள்ளலாகும். உண்மைநெறிகடைபிடித்தொழுகிய நமது, ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளும், நீதிநெறிவிளக்கக்கடை வெண்பாவில், முடியுரை கூறுபவர் போல இலேசாகக் கூறியருளியதென்னையெனின்,

ஐயந்திரிபின் றகன்றுத்தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிகண் விழிப்பத்தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

என்பதாம். இதனுள் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருப்பது அறிவாளர் அறியத்தகுவதொன்றாம். இதனை விரிக்கின் இன்னும் பலதிறப்பட்டு நிற்குமாதலான், இதனோடு முடிபு காட்டி முடிக்கலாயிற்று, சுபம் சுபம்.

ஒரு வேண்டுகோள்:—உள்ளத்தெளிவு, என்னும் பெயர்பூண்ட வியாசம் ஒன்று, சைவசித்தாந்த சாத்திரச்சாரமாக, யான்எழுதிவருகின்றதை, அடுத்த பிரசுரத்தில் வெளியிடுவேன். அடுத்தடுத்து என்னைத் தூண்டிவரும் எனது அருமை நண்பர்கள், அதுகாறும் பொறுக்க வேண்டிக்கொள்கின்றேன்.

இராமசாமிவன்னியன்.

---

*

சிவமயம்.

# சேதுபுராண அரும்பதவிளக்கம்.

(முற்றொடர்ச்சி.)

## திருநாட்டுச்சிறப்பு.

(க) வடக்கெல்லையாய் நின்ற வடவேங்கடத்தினெடியதென்றி சையினலைவு நீங்கும்படி பூமியை நேராக நிறுவுதற்கு வருகின்ற வகத்திய முனிவரமர்ந்த தென்றலையுடைய பொதியமலைதரும் பொருநை நதியின்வளம் மலிகின்ற சால்பையுடைய வொப்பற்ற பாண்டி நாடு முதன்மை வளர்கின்ற தமிழ்வழங்குமிரண்டெல்லையுளொன்றாகிய தென்குமரிதன்கண் நிலையாகிப்பொருந்தும் தென்பால்மலயமலை எனக்கூட்டுக.

(உ) கிருபையின் மிகுதியாலருளுங் கலைக்ஞானங்களினெண்ணைப்பொருந்திய (அறுபத்துநான்கு) திருவிளையாடல்களையுடைய நினைத்தற்கரிய பரமபதியை மீனாக்ஷியம்மையாரோடு நெருங்கிச்சூழ்ந்து, ஆலங்கரிக்கப்பட்ட பூக்களைச்சொரிந்து, வணங்கித்தேவர்கள் செலற்கிடமின்றிப் புறத்தே நிற்க, அலங்கரிக்கப்பட்ட முத்துவடம்பொருந்திய, அழகிய ஸ்தனங்களையுடைய பெண்களுடன் ஆடவர்கள் உள்ளே சென்று வணங்குகின்ற மதுரையாகிய பழைய ஊரை அந்தத் திருநாடுடையது.

(௩) உயர்ந்தசுடராகிய ஞானத்தை யொப்பற்ற மூன்று ஸ்தனங்களையுடைய பெண்ணாகப்பெற்றுக்காத்து, அந்தமில்லாத வானந்தமானது அருளினாலே திருவுருக்கொண்டு, முடியைத்தரித்து, அரசுரிமையை நடாத்தி, அழகுமுடிந்த தமிழையுடைய சங்கப்புலவர்க்கெதிரே நின்று விடைகூறச்செய்த விந்தமதில் சூழ்ந்த மதுரையினுயர்ச்சியை யென்னாலும் பிறராலுஞ் சொல்லலாகுமா?

(௪) வலிமை பொருந்திய பாண்டியனுடைய சந்ததியை வளர்க்கும் பாண்டி வளநாடானது வணங்காத (கீழ்ப்படியாத) எளிய சம

ணர்களாகிய நீசர்களுடைய பணியினாற் கூன்பாண்டியன்மீது சென்ற கொடியசுரநோயை நீக்கவந்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் இருந்த திருமடம் விளங்குகின்ற காட்சியையுடைய, நீக்கமின்றிப் பொன்னையுடைத் தெறியுந் திரைபொருந்திய வைகைநதியின் வடபாகத்திற் பொருந்திய திருவாப்பனூரையுடையது.

(ரு.) பாடகமென்னும் மாபரணம் பொருந்துந் திருவடிகளையுடைய உமாதேவியாரது முலைப்பால் நீங்காத வதரமாகிய பவளத்தையுடைய பாலகராகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரோடு கோட்டமாகிய மனத்திற் பொய்யையுடைய சமணர்கள் வாதுகுறித்தபொழுது எதிரேறிய பாடலையுடைய, வளையலையணிந்த கையையுடைய மாயைபொருந்திய பெண்கள் தன்நாயகரோடுங் குடைந்து ஸ்நானஞ் செய்கின்றதுறை செறிந்த நீர்பொருந்திய வைகைக்கரையிலுள்ள திருவேட்களம் என்னுஞ் சிவஸ்தலமும், சொல்லுகின்ற தமிழையுடைய அழகிய பாண்டிநாட்டினிடத்ததாம். ஏடகம் - ஏடுசேர்ந்தவிடம்.

(சு.) அலர்கின்ற தாமரைகளையுடைய தடாகங்களின் பக்கங்களினும், இதழ்படிகின்ற சோலைகளின் பக்கங்களினும், பனிக்கறைசூழுமிடங்களினும், பெண்களும் அப்பெண்களில் மனம்படிந்த நாயகர்களும்போலத் துதிக்கைபாற் றழுவும் மதமாகிய கான்யாறு வட்டப் பெண்யானைகளும், ஆண்யானைகளும் கலந்து விளையாடுகின்ற, கொடுங்குன்றமென்னும் மலையும், வளம்பொருந்திய வயல்களையுடைய பாண்டிநாட்டிலுண்டு.

(எ.) முத்தையுடைய ஊருகின்ற சுரிமுகத்தையும் வெண்மை நிறத்தையுமுடைய சங்கங்கள் தவழ்ந்துகூடி வீட்டின் முன்றில்களெங்கும் பூங்கொத்துப்பொருந்திய கூந்தலையுடைய பெண்கள் கால்பெயர்க்க விடமின்றி விளங்குகின்ற, மந்தரமலையாகிய மத்தூருகின்ற பெரிய திருப்பாற்கடலைப்போலப் பரந்த மலர்களையுடைய குளிர்ந்த நீர்பொருந்திய வாவிகள்சூழ்ந்த திருப்புத்தூரும், மேகம் மழையைப் பொழியும் பொதியமலை பொருந்திய தமிழையுடைய பாண்டிநாட்டிற் பொலிந்து விளங்கும்.

(கூ.) மனமாகிய வாயிலைக்கடந்து கண்டிக்கப்படாத பேரொளியாய்ப் பேரின்பமாய் எவருஞ்சிந்திக்க அச்சிந்தனையையகன்று, பின்சிந்தனையொழிய அவர்மனத்தே நீங்காமற்புகும் ஏகரை அடியார்களுடைய கூட்டமாகிய வாயிலைப்பெறுகின்றவர்கள் கொள்ளும்படி கொடுக்கும் பெருந்தகைமையால் எவர்களுந் துதிக்கின்ற திருப்புன வாயிலைத் தமிழையுடைய பொதியமலைதரும் பொருநா நதிசூழ்ந்த பாண்டிவளநாடு தானுடைய தவத்தை முற்காலத்திற் செய்ததுஉள. ஆயில்+அகன்று+நினைவு+ஒழிய+அகலாது+அகம்+புகுதும்+ ஒன்றெனக் கூட்டுக.

(கo) சோபானம் - கற்படி, வேலைத்தானப்பேர் நிலம் - கடல் சூழ்ந்த கருமபூமி, ஞானப்பேர் பேர் - பெருமை.

(கக) உரைசால்புரை - சொல்லுதல் மிக்க உவமை.

(கஉ) பருத்த இலக்கணச்சுழியால் மேன்மை பொருந்தும் மத்தகத்தையுடையயானை பாதலத்திற் புகப்பாய்ந்தது - படர்கின்ற ஆழமாகிய ஆற்றின் அழகிய சுழிக்கு முன்னிரைகொள்கின்ற வண்டுகளொளிபொருந்திய வளையலையுடைய பெண்களினுரோமத்தைக் காட்டுஞ்சுழிபொருந்திய வெண்டிரையையுடைய சுத்தமாகியஆகாய கங்கையைத் தரித்த சிவபிரான் வாழுகின்ற திருச்சுழியலானது, சோழர்வலியசேரர் என்னு மிவர்களுடைய அழகிய நாட்டிலுளதோ இல்லை, பின் பாண்டிநாட்டிலுளதாம்.

பருத்த சுழியில் மிதக்கும் எனினுமமையும்.

(கங) குன்றம் கரம்படைத்தனைய என மாற்றுக. வள்ளி முன்னர் - வள்ளிநாயகியாரை விவாகஞ்செய்தற்குமுன்னர். சரங்குன்றமெனத்தகைய வலிவிழிப்பூண்முலைக்கயமான் - பாணத்தையும் மலையையும்போன்ற தகைமை பொருந்திய வரியையுடைய கண்ணையும் ஆபரணம் பொருந்திய முலையையுமுடைய தெய்வயானை.

(கச) பொற்றலம் - பொன்னுலகம். எழுபுவனமுற்று முற்றலம் - எழுபுவனங்கள் முழுதையும் அழிக்கும் நஞ்சு. துயில்கூர் தும்பி - நித்திரைசெய்கின்ற யானை.

(கரு) வேதத்தை வாயாற்சொன்ன பிரமாவும் மதித்தற்கரி தாயளவிறந்த நிலையையுடைய மாண்பினதாய் மூங்கிலீன்ற வொப் பற்ற முத்து அழகிய நிலவை விட்டெறிப்ப விளங்குகின்ற நெல்லை யானது, தீயின்றுற்போலத் தளிர்த்த இனிய மாவின் குளிர்ந்த பழ முடைந்த செந்தேன் மணக்குங்காயையீன்ற வாழைகள் பொருந்திய பாண்டிநாட்டினழகைத் தெரிக்கும்.

(கசூ) சொல் நாடு நெறி - சொல்லையாராயுநெறி. தென்னாடு- அழகிய நாடெனவும், தென்றிசையிலுள்ள நாடெனவும் பொருள் படும்.

(கஎ) முன்னு - முதலாக.

(கஅ) கொடையாளர்கள் தாம் பிரதியுபகாரங்கொள்ளுமாசை யிலராயினும், கொடைக்குணம் விடாமையால் வள்ளியோரிடத்து எற்று வழங்குதல் போல. அள்ளல் - சேறு.

(ககூ) மின்னுவாள் விளக்கம் - மின்னலாகிய வொளியையு டைய விளக்கு. பன்னிறப்படைவில் - இந்திர தனு.

(உ0) பார்முகம் வெயர்வுற்றென - பூமியில் முகம் வெயர்வுற் றுற்போல. புயலின்றுரை - மழைத்துளி.

(உக) நிலையிலா நீர்மை - நிலையாத குணம். மலயமாசயிலம். பொதிய மலையானது விலையிலாமணி வெண்முத்து பென்னென்னு மிவற்றோடு மருவியை வழங்கியதென முடிக்க.

(உஉ) கோடு - கரை. நாரசிதி - கடல் இருமுடிபாக்குந.

(உரு) தளிர்கள்பொருந்திய கொடிகள் சுற்றிய வலிமைபொ ருந்திய நெடிய கொம்புகள் பின்னலால் நெருங்கிய மரங்களை யகழ் ந்து செல்கின்ற பொருநையினினிய நீர் நெருங்கிய மலர்களையுடைய மரங்களைச்சாய்க்கா தொழுகலாலுறையுங் கூட்டிலுள்ள பறவைக ளென்றும்போலப் பறவாமலிருப்பன.

(உசூ) உரிஞ்சி - உரிஞ்சு, குறடு - கட்டை.

(உஎ) ஒலிக்குந் திரையையுடைய கடலிற்றான் சமூகப்பட்டுத்தருகின்ற முத்தை நிரையான மூங்கிலீன்ற முத்தென்று சொல்லும் வசனங்களை மனத்திற்கொண்டாற்போல, ஒலிக்கின்ற நீரைக்கொண்ட பொருனையானது பொதியமலை தருகின்ற முத்துக்களையெல்லாங் கரையிற்பொருந்த வொதுக்கும்.

(உஅ) குறிஞ்சி தான்பெற்ற குடைகின்ற நீரையுடைய பொருனையாகிய பெண்ணை வருணற்குக் கொடுக்கும், நடக்கின்ற விவாகக்காட்சியைப் பார்க்கும் விருப்புற்றாற்போலக் கழியையடையும்போதில் அதனோடு முல்லை முதலிய இடைநிலத்துப்பொருள்களெல்லாம், இனத்தாலியைந்தன.

(கூ0) பற்றுக்கோடான மேலைத்திரை யென்னுமொரு குடிப்பிறப்பைக்கருதி உவமையில்லாத வருணனுடைய திண்டோளைப்புணராத வைகை பக்கத்திலுள்ள வாய்க்கால்களை நிரைத்து வயல்களிலெங்கும் பொங்கிப்பரந்து எழுகடலைப்போல முழங்கி உழவர்கள் வந்தார்கள். தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம்பற்றிப் பேசினர் என்க. (தொடரும்.)

ஆ. மு. சோமாஸ்கந்த பிள்ளை.

---

உ

சிவமயம்.

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்.

——[×]——

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அப்படிக்கானல் சகியாதகோபத்தினால் எத்தனை கூட்டங்கள், எத்தனை அணிவகுப்புகள், உண்டாய்விடும். சுவாதீனத்திற்காக எத்தனை வாக்குவளமுள்ள பிரசங்கங்கள், உபந்நியாசங்கள் எழுந்துவிடும். கொடுமையும் இயற்கைவிரோதமுமான கொடுங்

கோன்மையை ஆக்ஷேபித்தவிஞ்ஞாபனங்கள் பிறந்துவிடும். ஆனால் அத்தகைய கொடியோன் ஒருவன் நமக்குள் உள்ளவாறே இருக்கின்றனன். அக்கொடியோன் அடங்கா அவாவேயாம். மனிதர்கள் அதனுக்கு அடிமையாயிருக்கச் சம்மதிக்கையில் ஆயுத வன்மையாவது, வாக்குபலமாவது கூட்டக் கையெழுத்தாவது அதனை எதிர்க்கமுடியாது.

இந்தக் கொடியோனுடைய பலத்தை சன்மார்க்க சாதனங்களாகிய தன்னை சிக்ஷித்தல் தன் மரியாதை, தன்னை வயப்படுத்தலாகியவற்றால்தான் வெல்லக்கூடும். எந்த ரூபமான அவாவின் கொடுங்கோன்மையையும் எதிர்ப்பதற்கு வேறெந்த மார்க்கமுமில்லை.

விஷய இச்சைகளில் தங்களைத் தாங்களே விட்டுக்கொள்ளுகிற ஜனங்களுடைய ஒழுக்கத்தை மதச்சீர்திருத்தச் சபைகளாவது ஜனசம்மதத்தைக் கிரஹிக்கும்படிக்கு வியாபகமான சொற்சக்தியாவது, இராஜரீகத்தின் சீர்திருந்திய ரூபமாவது, கல்விச்சாலைகளிற் கற்றுணர்ந்த கல்வி மிகுதியாவது, உயர்வுபடுத்தமாட்டா. இழிவான இன்பத்தைத் தொடர்தலானது, யதார்த்த இன்பத்தை இழிவாக்குகின்றது. அது ஜனங்களுடைய நீதிநெறிகளை வேருடன் களைந்து, ஊக்கங்களை நாசப்படுத்தி, ஆண்மையையும் திடத்தையும் கீழ்ப்படுத்துகின்றதுபோலவே ஒவ்வொரு மனிதன் விஷயத்திலும் செய்கின்றது.

மன அடக்கத்தின் தைரியமானது, அனேக வழிகளிற் பிரகாசிக்கின்றது. ஆனால் யோக்கியமாய் வாழ்வதினும் வேறொன்றிலும் அவ்வளவு பரிஷ்காரமாவது அன்று. தன்னய மறுப்பில்லாதவர்கள் தங்கள் சொந்த நன்மைபற்றிய இச்சைகளுக்குட்படுகிறதுமட்டுமல்ல, ஆனால் தங்களை ஒத்த சித்தமுடையவர்களுடன் கட்டுப்பட்டிருப்பது வழக்கம். மற்றவர்கள் செய்கிறதை இவர்களும் செய்கின்றனர். இவர்களும் முடிவை எதிர்பாராமல் தங்கள் பக்கத்தவர்களைப்போலவே செலவு செய்து தங்கள் வகுப்பினர் ஏற்படுத்திய, தரத்திற்குப்பொருந்த வாழ்தல் வேண்டும். ஆகவே, அனைவரும் தங்கள் வருமானத்திற்கு மிகவும் அதிகமாகமே வாழத்தக்க மாதிரியை விரும்புகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவரைத் தம்முடன்

இழுத்துக்கொள்கின்றனர். அவர்களுக்கு அதனை நிறுத்துதற்குத் தக்க சன்மார்க்க தைரியம் கிடையாது. தாங்கள் மிதமிஞ்சி வாழ்தலாற் பிறருக்குக் கெடுதலிருந்தபோதிலும், அவர்களுக்கு அந்த இச்சையைத் தடுக்க முடியவில்லை. கடனானது அவர்களைப் பந்தப்படுத்துகிறவரை, வரவரக்கடனைக் கவனிக்காமற் கொள்வாராகின்றனர். இதிலெல்லாம் மிகுந்த சன்மார்க்க கோழைத்தனமும், இழி தகைமையும், ஆண்மையுள்ள சுவாதீன ஒழுக்கமின்மையும் வீற்றிருக்கின்றன.

நியாயமான எண்ணமுள்ள ஒரு மனிதன், தான் இல்லாத விதத்தை இருப்பதாகத் தோற்றுவிக்கவாவது, தனக்கு உள்ள செல்வத்தைவிட அதிகச் செல்வமுடையவனாகப் பாசாங்கு செய்யவாவது தன்னுடைய தகுதி இடங்கொடாத நிலைமையில் வாழ இச்சிக்கவாவது, பின்வாங்குவான். மற்றவர்களுடைய சொத்தைக்கொண்டு அயோக்யமாய் வாழ்தலினும், தன் சொந்த வகையைக்கொண்டு, யோக்யமாய் வாழும்படியான தைரியத்தை உடையவனாயிருப்பான். தன் வரவிற்கு மிஞ்சிய வாழ்க்கையின் தரத்தை நிலைப்படுத்த முயற்சிப்பதிற் கடன்படுகிறவன் பரிஷ்காரமாய்ப் பிறனுடைய சொத்தைப் பறிக்கிற மனிதனைப்போன்ற அயோக்யமான சுபாவத்தையுடையவனாகின்றனன்.

அனேகருக்கு இந்த அபிப்பிராயம் அசம்பவமாகத் தோற்றலாம். ஆனால் எவ்விதமாய்ப் பரீக்ஷித்துப் பார்த்தாலும் நிலைத்து நிற்கும். பிறரைக் கெடுத்து வாழ்வது அயோக்யமட்டுமன்று; வார்த்தையிற் பொய்யானது எப்படியோ, அப்படியே செய்கையிற் பொய்யாகவுமிருக்கின்றது. கடன்காரர்கள் பொய்யர்கள் என்னும் ஜார்ஜ் ஹெர்பர்ட் (George Herbert) என்பவருடைய பழமொழியானது, அநுபவத்தில் நியாயமாயிருக்கின்றது. நாம் உடைத்தாயிராத வஸ்துவை உடைத்தாயிருப்பதற்கும், நாம் உண்மையில் இல்லாத விதமாய் இருக்கவும் வேகப்படுவதானது சமஸ்தமான துன்மார்க்கத்தினுக்கும் மூலமாயிருக்கின்றதென்று ஷேப்ட்ஸ்பர்க் (shafetsburg) என்பவர் ஏதோஒரு இடத்திற் கூறுகின்றனர். மிராபியூ (Mirabeau) வின் மிகவும் அபாயமான வாக்கியத்தில் நம்பிக்கைவைத்தல் கூடாது.

ஆனால் சன்மார்க்கத்திற்குரிய வெகு சொற்பமான அம்சத்தையும் நெருங்கப் பின்பற்றுதலானது, ஆண்மையும் மேன்மையுமான ஒழுக்கம் அனைத்தினுக்கும், அஸ்திவாரமாயிருக்கின்றது.

கண்யமுள்ள மனிதன் தன் வருமானத்தைச்செட்டாகச் செலவிட்டுத்தன் வாழ்க்கையை யோக்கியமாய்க் கழிக்கின்றனன். அவன் தன் இயற்கையான ஸ்திதியைவிட அதிக ஐசுவரியவானாகக்காட்ட இச்சிக்கிறதில்லை. அல்லது கடன்பட்டு நஷ்டக்கணக்கு உண்டாக்குகிறது மில்லை. சொத்து சுருக்கமாயும் இச்சை அதற்குள் அடங்கியுமிருக்கப்பெற்றவன் எளியவனல்லன். அதுபோலவே தன்தேவைக்குப் போதுமானதைவிட அதிக வகையுள்ளவன் ஐசுவரியவானாகவேயிருக்கின்றனன். ஏதன்ஸ் (Athens) பட்டணததின் வழியே ஆடம்பரத்துடன் கொண்டுபோன மிகுந்த ஐசுவரியத்தையும், ஆபரணங்களையும் விலையுயர்ந்த தட்டுமுட்டுச் சாமான்களையும் 'சோக்கிரேட்ஸ் (Socrates) என்பவர் பார்த்தபொழுது, "எனக்கு விருப்பமில்லாத எத்தனைசாமான்களை நான் பார்க்கிறேன்" என்று சொன்னார். "தன்னயம் பாராட்டுதலைத்தவிர மற்றெதையும் நான் மன்னிக்கக்கூடும்" மிகவும் எளிமையான நிலைமையிலுங்கூட எனது உனது என்பதைப் பற்றிய பெருமை நிகழ்கின்றது. தங்களுடைய குடும்பசம்ரக்ஷணையைத் தங்கள் வரவினுக்குள் ஒழுங்குபடுத்துமுன்னுணர்வுமட்டுமிருக்குமானால் மிகவும் ஏழைகளைத்தவிர மற்றவர்களுக்குத் தங்கள் தினசரித வாழ்க்கையிற் பணம் பணமென்னும் எண்ணமேவருவதற்கு அவசியமில்லை" என்று பெர்த்தஸ் (Perthes) மொழிந்தனர். சாஸ்திரத்திற்காகப் பண அபிமானத்தைவிட பேரடே (Faraday) என்பவரைப்போல மேலானபயனைக் கருதி பணவிஷயத்தில் ஒருமனிதன் அஜாக்கிரதையாயிருக்கலாம். ஆனாற் பணத்தாலெய்தும் போகங்களை உடைத்தாயிருக்க விரும்பினால் அவன் அதை யோக்யமாய்ச் சம்பாதித்தல்வேண்டும். கொடுக்க வகையில்லாமல் வழக்கமாய்க் கடன்வாங்குகிறவர்களைப்போல மற்றவர்களுடைய சம்பாத்தியத்தைக்கொண்டு, காலக்ஷேபம் செய்யக்கூடாது. எப்பொழுதும் கடனில் முழுகியிருந்த மேஜின் (Maginn) என்பவர் (Wine) சாராயத்திற்காக என்ன கொடுத்தார் என்று கேட்கப்பட்டபொழுது அவர் தன

க்குத்தெரியாதென்றும், ஒரு புஸ்தகத்தில் ஏதோ பதிவுசெய்துகொண்டனர் என்றும் விடையளித்தனர்.

இவ்விதமாய்ப் புஸ்தகத்திற் பதிவு செய்தலானது, இழந்த மனமுடைய அனேகருக்குச் கேடாகப் பலித்திருக்கின்றது. அவர்கள் தாங்கள் தற்சமயம் செலுத்தத் தகுதியின்றிச், சாமான்களைக் கடனுக்கு வாங்கும் இச்சையைத் தடுக்கக்கூடவில்லை. சிலசமயங்களில் வாங்கப்பட்ட கடன்களைத் திரும்ப வாங்குவதற்குக் கடன்காரர்களுக்கு அதிகாரம் கொடுக்கிற சட்டமானது முற்றும் எடுபடும் விஷயத்தில் ஜனங்களுக்கு மெத்த நன்மையாயிருக்கலாம். ஆனால் வியாபார முயற்சியிற் கடன்காரர் தீராப்பக்ஷம் முடிவில் சட்டப்படி வசூல்செய்யும்படிக்கும், கடனாளி கடன்வாங்கும்படிக்கும் வேண்டிய ஊக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிட்னி (Sidney) என்பவர் ஓர் புதிய இடத்திற்குப்போனபொழுது அவர் உயர்ந்த பறறுவரவுள்ளவரென்று ஸ்தலசமாசாரப் பத்திரிகைகளிற் பிரசித்தமாயிற்று. அவருக்கு வியாபாரம் கொடுப்பதற்கு நாலுபக்கத்திலும் தேட ஆரம்பித்தனர். ஆனால் அவர் தன்னுடைய புதிய ஆகந்துகர்களிடம் உடனே, ஏமாற்றுமற் சொன்னதாவது "நாங்கள் பெரிய மனிதர்களேயல்லம். எங்கள் கடனையிறுத்துவிடுகிற சாதாரணமான யோக்கியதையுடைய மனிதர்கள்தான்."

செட்டுத்தனமில்லாவிடினும் முற்றிலும் யோக்கியமாயிருந்த ஹேஸ்லிலிட் (Hazlitt) என்பவர் ஒருவருக்கொருவர் வேற்றுமையில்லாத இரண்டு வகுப்பு ஜனங்களைப்பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்தப்பணத்தைத் தங்கள்கைவசம் வைக்கக்கூடாதவர்களும், மற்றவர்களுடைய பணத்தினின்றும் தங்கள் கைகளைத் தடுக்கமுடியாதவர்களுமாய். முற்கூறப்பட்டவர் என்றும் பணப்பிரியத்தில் இருக்கின்றனர். ஏனென்றால் அதை நிவிர்த்திக்க விரும்பினாற்போல் முதலிற் புலப்படுகிற எந்தப்பொருளின்மீதாவது, தங்கள் பணத்தைப்போட்டுவிடுகின்றனர். பிற்கூறப்பட்டவர் தங்கள் சொந்தத்திலிருந்ததைச் செலவுசெய்துவிட்டுத் தங்களுக்குக் கடன் கொடுக்க மனமுள்ளவர்களிடத்திலெல்லாம், இடையறாது கடன் வாங்கிவருகின்றனர். கடைசியிற் கடன் கொள்வதில் உண்டா

கிய அவர்களுடைய யூகமானது, அவர்களுக்குக் கேடாக முடிவது
வழக்கம்.

அத்தகைய பிரதானமான துர்ப்பாக்கியமுள்ளவரில் ஷெரிடன்
(Sheridan) என்பவர் ஒருவர். அவர் கடன் வாங்கியும், தன்னை நம்
பினவர் ஒவ்வொருவரிடத்திலும் கடனுக்குட்பட்டும் தன் செலவு
விஷயத்தில் உற்சாகமும் அஜாக்கிரதையுமுள்ளவராயிருந்தனர். வெ
ஸ்டு மினிஸ்டர் (West Minister) நாட்டுக்காக அவரைக்கோரிய
பொழுது முக்கியமாய்ச் சாதாரணமான கடன்கோளினின்றும் ஜன
ங்களுடைய திருப்திக்குறை எழுந்தது. அனேக ஏழை ஜனங்கள்
தங்களுக்குச் செல்லவேண்டிய கடன் சீட்டினுக்குப் பணம் கேட்டுக்
கொண்டு அவருடைய பிரசங்க ஸ்தலத்திற் சூழ்ந்து கூடினர், என்று
லார்ட் பால்மேர்ஸ்டன் (Lord Palmerston) என்பவர் தம் கடிதம்
ஒன்றிற் கூறுகின்றனர். அவருடைய சகல கஷ்டங்களின் நடுவே
ஷெரிடன் (Sheridan) என்பவர் எப்பொழுதும்போல மிகவும்அற்ப
சித்தமுடையவராய்த் தன் கடன்காரருக்கு வருத்தமுண்டாகும்படி
பலவிதமான பரிகாச மொழிகளைக் குழறினர். அவரால் நடத்திய
போஜனப் பந்தியில், லார்ட் பால்மர்ஸ்டன் (Lord Palmerston)
உம் உள்ளபடியே கூடவிருந்தனர். அதில் தற்காலமிருந்த ஷெரிப்
(Sheriff) உடைய உத்யோகஸ்தர்கள் பந்தி விசாரணை வேலைக்கார
ராக உடைதரித்து வேலை பார்த்தனர்.

ஷெரிடன் (Sheridan) உடைய சொந்தக் கடன்காரர் விஷயத்
தில் அவருடைய சன்மார்க்கமானது எவ்வளவு தளர்ந்திருப்பினும்
பொதுப்பண விஷயத்தில் எவ்வளவோதூரம் போக்கியமுள்ளவரா
யிருந்தனர். ஒருக்கால் லார்ட் பைரன் (Lord-Byron) என்பவரும்
கூடஇருக்க நேரிட்ட ஒரு போஜனப்பந்தியில்,உத்யோகத்தை எதிர்
த்துத்தங்கள் கொள்கைகளையே பிடிவாதம்செய்து விக்ன் (Whigs)
என்னும் கக்ஷிக்காரருடைய முரட்டுத்தனத்தைப்பற்றி ஓர்வியாக்கி
யானம் செய்ய நேரிட்டது. அதில் ஷெரிடன் (Sheridan) என்ப
பவர் கூர்மையாகத் திரும்பிச் சொன்னதாவது, “ஐய பொதுப்
பணத்தினின்று தற்காலத்திலாவது, பிதிரார்ஜிதமாகவாவது மானி
பம், அல்லது சம்பாத்தியமாகக்கிரஹித்து, வருஷம் ஒன்றுக்கு

ஆயிரம் ஆயிரமகத் திரட்டுகிற இந்த லார்ட் (Lord) என்னும் பிரபு அல்லது அந்த ஏர்ள் (Earl) என்னும் பிரபு அல்லது மற்றொரு மார்க்குவிஸ் என்னும் பிரபுவாகிய இவர்களுக்குத் தங்கள் தேசாபிமானத்தைப்பற்றிப் பெருமை பாராட்டுவதும், மனக்கவர்ச்சியைத் தடுப்பதும், எளிதாயிருக்கின்றது. ஆனல் அவர்களுக்கு ஒத்தபெருமையும் குறைந்தபக்ஷமும் ஒத்த சாமர்த்தியமும், சமானராஹித்யமுமில்லாத இச்சைகளையுமுடையவர்கள், எத்தகைய துர்மனக்கவற்சியினின்றும், நீங்கியிருக்கிறார்களென்பதை அவர்கள் அறியார்கள். அதுவுமின்றி ஒரு ஷில்லிங்குஎன்னும் எட்டணு நாணயத்தைத்தங்கள் சொந்தமாகச்சம்பாதிப்பதுஎவ்வாறென்பதைத்தங்கள் ஆயுளில் உணர்ந்தவர்களாகவுமிலர்.

அந்நாளையிற் பொதுப்பண விஷயமான நியாயத்தன்மையானது, மிகவும் குறைவு பட்டிருந்தது. அரசாங்க சம்பந்தமானதிருட்டு, கௌரவக்குறைவாய் எண்ணப்பட்டதில்லை. அந்தக்கக்ஷிகளின் தலைவர்கள் பொதுப்பணத்தைத் தாராளமாய் உபயோகித்துத் தங்கள் கக்ஷிக்கு ஆள்சேர்ப்பதில் ஐயப்படுவதில்லை. "தன் சொந்த உதாரத்வகுணத்தால் ஊராருடைய பணத்தினின்றும் பாலம் கட்டிய பெரிய மனிதனைப்போலப் பிறருக்கு நஷ்டமுண்டாக்கித் தாங்கள் தாராளமாயிருந்தனர். லார்ட் கான்வால்லிஸ் (Lord Cornwallis) என்பவர் ஐயர்லாந்து (Ireland) தேசத்துக்கு லார்ட் லிப்டனெண்டு (Lord–Lientenent) ஆகநியமிக்கப்பட்டபொழுது நேப்பியர்களின் தந்தையாகிய கர்னல் நேப்பியர் (Colonel–Napier) ஐ சேனையின் கணக்குகளை ஒத்துப்பார்க்கும் உத்யோகத்தை வஹிக்கும்படி கட்டாயம் செய்தனர். "எனக்கு ஒரு யோக்கியமான மனிதன்வேண்டும், என்னைச்சூழ்ந்துள்ள கழுகுகளினின்றும் பலாத்காரமாய்க்கொள்ளக்கூடிய ஒரே பொருள் இவர் தான்" என்று பிரபுசொன்னார்.

(இன்னும் வரும்.)

# சிலகேள்விகட்கு விடை.

என் நண்பரொருவர் எனக்கெழுதிக்கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு யானிறுத்த விடையும் "செந்தமிழ்"க்கேற்றவையென்று வெளியிடலாயினேன். அக்கேள்விகளாவன:—

(1.) காளமேகப்புலவர், அடை சொல்லில்லாமல், ஒன்றுமுதல் பதினெட்டுவரையில் வரப்பாடிய வெண்பாவைத் தளைசீர்கெடாமல் அலகிடுமாறெங்ஙனம்?

(2.) வெண்பாவினுள், ஓரடியில் ஐஞ்சீர்களும் நாலசைச்சீர்களும் வருதல் கூடுமா? இவற்றுக்கு யானிறுத்தவை வருமாறு:—

1. ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு
வொன்பதுபத் துப்பதி னொன்றுபன்னி—ரண்டுபதின்
மூன்றுபதி னான்குபதி னைந்துபதி னாறு
பதினே ழுபதினெட் டு.

இதன் முதலடியிற் குற்றியலுகரங்களின் முன்னர் உடம்படுமெய்பெறுதல் "தன்முகமாகத் தானழைப்பதுவே" என நன்னூற்சூத்திரம் ௩௦௩-ல் உடம்பொடு புணர்த்திருத்தலால் சிறுபான்மை கொள்ளப்படும். இவ்விதி கொள்ளாக்கால், இவ்வெண்பா ஒழுங்குபடுமாறு காண்டலரிது.

2. வெண்பாவினுள் ஓரடியில் ஐஞ்சீர்களும் நாலசைச்சீர்களும் வருதல்கூடும். அவை பெருவழக்கன்று, சிறுவழக்கினுமிக்கருகியது. கடைச்சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய ஐந்திணையைம்பது என்னும் நூலில் பாலைத்திணைக்கண் பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லிய,

"உதிரந் துவரிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—வெதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு."

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான் வந்திருக்கின்றது. இதிற்கிலக்கணம் :—"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சி ரடியு முளவென மொழிப." என்னுந்தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளைவிரவியும், ஆசிரியம் விரவியுமென்றது என்னையெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு"

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியி னோடு கிடப்பதே—கெண்டிக்
கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னா
ளழுதகண் ணீர்துடைத்த கை.

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது" எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர் "வெண்பாவோடுங்கலிப்பாவோடும் விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர் புலவர் என்றவாறு" எனவும், "கண்டகம்பற்றி... ............கை"

"கிடக்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்
தடங்கட் டடங்கட் டளிரியலார் கொல்லார்—கிடங்கில்
வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா
யிளையாடன் கண்ணொக்கு மென்று."

இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடிவந்தவாறு காண்க." எனவுங் கூறியவாற்றானும் நன்குணரக் கிடக்கின்றமையால், வெண்பாவினுள் ஐஞ்சீரடிகள் வருதல் கூடுமென்பது பெறப்படுகின்றது.

வெண்பாவினுள் யான் மேற்கூறிக்காட்டியாங்கு நாலசைச்சீர் வருதல் பெருவழக்கன்றாயினுஞ் சிறுவழக்கினுள் அருகி வழங்கிவருகின்றது. இதற்கிலக்கணம் பின்னர்க்கூறு மிலக்கியச்செய்யுளிற் காணப்படுகிறது. அஃது "குலாவணக்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி, நிலாவணக்கு வெண்மணன்மே னின்று,—புலானுணங்கல் - கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர், உள்ளம்புக் காப்ப திரை." என்பதாம். இவ்வெண்பாவை—கோ+வின்+மையோ—எனப்பிரித்து வஞ்சியுரிச்சீர்வந்த செய்யுளென்று காரிகை

காரர் முதலாயினோர் குற்றங்கூறிக்களைகின்றார். அங்ஙனம் வஞ்
யுரிச்சீர்வந்த செய்யுளொன்று ஆன்றோர் வாக்கினதாக வழங்காத
வழுவியமைந்தமைக்கு உதாரணச்செய்யுட்கள் செய்யப்பட்டு வழ
குதல் இலக்கண வழக்குமன்று. ஆகலான், மேற்கண்ட சீ
கோ+வின்+மை+யோ எனப்பிரித்து நான்கசைச் சீராகவே கொ
ளல்வேண்டும். இங்ஙனம் வலியுறுத்தல் யாதுகாரணம்பற்றியே
வெனின், எல்லாப்பாக்களுக்கும் பொதுவாகலின் நான்கசைச்சீரை
பொதுச்சீரென்பதாகலான், காயிற்றுரிச்சீர்போல நேரீற்றுப்பொ
துச்சீரும் வெண்பாவிலருகி வருதல் பெறப்படுகின்றது. ஆயினுப்
நாம் வேண்டுமென்றே இங்ஙனம் அமைத்துச்செய்யுள் செய்தலை
யாது யாதாயினும் முட்டுப்பாடுற்ற தோரிடத்திலமையும். "அசை
யுஞ்சீருமிசையொடுசேர்த்தி, வகுத்தனருணர்த்தலும் வல்லோரா
றே" என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்திற்கொப
முடிப்பதே கற்றோரியார்க்கு முடம்பாடாம.

எப். கே. எப். அதுல்காதிறு ராவுத்தர்.

---

ஸ்ரீ

# புறத்திரட்டிற் கண்ட பாடல்கள்.

## சாந்திபுராணம்.

1. தானத்துக் குரித்து மன்று தானறிந் தீயிற் சால
வீனத்தி லுய்க்க நிற்கு மெச்சத்தை யிழக்கப் பண்ணு
மானத்தை யழிக்குந் துய்க்கின் மற்றவர்க் கடிமை யாக்கு
மூனத்து நரகத் துய்க்கும் பிறர்பொரு ளுவக்கில் வேந்தே.
(வெஃகாமை.)

2. ஆனை யூற்றின் மீன்சுவையி னசுணமிசையி னளிநாற்றத்
தேனைப் பதங்க முருவங்கண் டிடுக்கணெய்து மிவையெல்லாங்
கான மயிலின் சாயலார் காட்டிக் கௌவை விளைத்தலான்
மான மாந்த ரெவன்கொலோ வரையா தவரை நவைப்பதே.
(புணர்ச்சிவிழையாமை.)

3. பிளவுகழு வெழுநரக மெரிகொளுவ லீர்த
லுளையவுறு வடிவொடுறு துயரம்விளை விக்குங்
கிளையறவு தருமரிய புகழினை யழிக்குங்
களவுநனி விடுதலற மென்றுகரு தென்றான்.

(கள்ளாமை.)

4. விண்ணி லின்பமும் வீதல் கேட்டுமான்
மண்ணி லின்பமு மாய்தல் காண்டுமா
லெண்ணி லின்பமா மீறி லாததே
நண்ணி நாமினி நயக்கற் பாலதே.

(மெய்யுணர்தல்.)

5. கனிந்தநெய்க் கவளங் கையில் வைத்துடன் கழறுவாரை
முனிந்திடு களிறு போல்வார் முத்தியை விளக்கு நீரார்
மனங்கொளத் துறந்தி டாதே வால்குழைத் தெச்சிற் கோடுஞ்
சுணங்கனைப் போலும் நீரார் பற்றிடைச் சுழலு நீரார்.

(அவாவறுத்தல்.)

6. ஆயிரங் கதிருடை யருக்கன் பாம்பினு
லாயிரங் கதிரொடும் விழுங்கக் கண்டுகொ
லாயிரங் கண்ணுடை யமரர் கோனுமோ
ராயிர மமைச்சர்சொல் வழியி னுயதே.

(அமைச்சு.)

7. தோளுமென் முலையு மல்குற் பாரமு
நாளு நாளு நவின்று பருகிலாக்
கேள்வன் மார்க்கும் பங்கனூர்க்கு மொத்தலால்
வாளும் போல்வரவ் வாணெடுங் கண்ணினர்.

(பொதுமகளிர்.)

8. ஆசை யல்குற் பெரியாரை யருளு மிடையுஞ் சிறியாரைக்
கூசு மொழியும் புருவமுங் குடிலமாகி யிருப்பாரை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லாரைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே.

ஜெ

## நாரத சரிதை.

—:o:—

1. வெவ்விட மமுதென விளங்கு கண்ணினார்க்
கெவ்விட முடம்பினி லிழிக்கத் தக்கன
வவ்விட மாடவர்க் கமிர்த மாதலா
லுய்விடம் யாதினி யுரைக்கற் பாலையே.

(புணர்ச்சி விழையாமை.)

2. பெற்றவை பெற்றுழி யருந்திப் பின்னரு
மற்றுமோ ரிடவயின் வயிறு தானிறைத்
திற்றைநாள் கழித்தன மென்று கண்படு
மொற்றைமா மதிக்குடை யரசு முண்டரோ.

(செல்வநிலையாமை.)

3. புழுமலக் குருடருண் மூழ்கிப் புலால்கமழ் வாயிற் றேய்த்து
விழுமவை குழவியென்றும் விளங்கிய காளையென்றும்
பழுகிய பிறவுமாகிப் பலபெயர் தரித்த பொல்லாக்
குழுவினை யின்பமாகக் கொள்வரோ குருடுதீர்ந்தார்.

(தூய்தன்மை.)

4. அருந்திய குறையிற் றுன்ப மாங்கவை நிறையிற் றுன்பம்
பொருந்துநோய் பொறுத்த றுன்பம் பொருந்தியே போகத்தக்க
மருந்தினுக் குளுற்ற றுன்ப மற்றவை யறுத்த றுன்ப
மிருந்தவா றிருத்த றுன்பம் யார்கொலோ துன்பமில்லார்.

ஷை

5. வல்லென்ற சொல்லும் புகழ்வாய்மை வழீஇய சொல்லு
மில்லென்ற சொல்லு மிலனுகலின் யாவர் மாட்டுஞ்
சொல்லுங் குறையின்மையிற் சோருந் மின்மையாலே
கொல்லென்ற சொல்லு முரைகற்றிலன் கொற்றவேலான்.

(இறைமாட்சி.)

*

6. மன்னன்மேவு கோயின்மேரு மானமற்றி மண்ணெலா
மென்ன லாய வூரிடத்தி லங்குமாளி கைக்குலம்
பொன்னின் மேரு வின்புறப் பொருப்பு நேர மாண்புறத்
துன்னு நேமி வெற்பை யென்ப சூழ்மதிற் பரப்பையே.

(அரண்.)

## இரும்பல்காஞ்சி.

——:o:——

1. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழனுறிக்
காலை யிருள்சீய்க்குங் காய்கதிர்போற்—சோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றா
னணிச்சே வடியெம் மரண். *

(கடவுள் வாழ்த்து.)

2. ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னாற்குப் பெறலருமை—பாதரோ
வார்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும்
போர்மலைந்து வெல்லும் புகழ்.

(வலியறிதல்.)

## பரிபாடலுறுப்பு.

——▣——

1. உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—வுலகனைத்துந்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவ
னான்மாடக் கூட னகர்.

(நகர்.)

2. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீறார் பூவி
னிதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயில்
தாதி னனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்

* இப்பாட்டை, இக்காலத்தார் நளவெண்பாக் காப்புப்பாட்டுக்களோடு ஒன்றாக அச்சிட்டிருக்கின்றனர்.

பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூ ரிருந்துயிலே.

ஷை

3. தன்றமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லா
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரைக் கொடித்தோரான்
குன்றமுண் டாகு மளவு.

ஷை

4. ஈவாரைக் கொண்டாடி யேற்பாரைப் பார்த்துவக்குஞ்
சேய்மாடக் கூடலுஞ் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு.

ஷை

5. செய்யாட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத லுண்டோ மதுரைப் புனைதேரான்
வையையுண் டாகு மளவு.

ஷை

6 கார்த்திகைக் காதிற் கனமகர குண்டலம்போற்
சீர்த்து விளங்கித் திருப்பூத்த லல்லது
கோர்த்தை யுண்டாமோ மதுரைக் கொடித்தேரான்
வார்த்தை யுண்டாகு மளவு.

ஷை

உ

# ஸ்ரீமாந்-காந்தியும் தமிழர்களும்.

கல்கத்தாவில் மிஸ்டர் ராமானந்த சாடர்ஜியால் பிரசுரிக்கப் படுகிற மாதாந்தப் பத்திரிகையாகிய "மாடர்ன் ரிவியூ"வில் தென்னு பிரிகாவில் இந்தியத் தலைவராக விளங்கும் ஸ்ரீமாங்-காந்தி தமிழ்ப்பா ஷையைப்பற்றி எழுதுவதாவது:—

"இந்த சச்சரவில் (டிரான்ஸ்வால் சச்சரவு) தமிழர்கள்செய்த காரியத்தைப்போல் வேறு எந்த இந்திய ஜாதியும் செய்யவில்லை. ஆதலால் வேறு யாதொரு காரணமும் இல்லாவிட்டாலும் அவர்க ளுக்கு என் திருப்தியை நன்கு உணர்த்துவதற்காக மாத்திரமாவது அவர்களுடைய புஸ்தகங்களை ஊன்றிப் படிக்கவேண்டும். சென்ற மாதம் அவர்களுடைய பாஷையைக் கவனமாகப் படித்துவந்தேன். அதைப் படிக்கப் படிக்க அந்த பாஷையிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. அது சேர்த்தியானதும் அமிர்தம்போன்றதுமான பா ஷை. நான் படிப்பதிலிருந்து எனக்குத்தெரிவது என்னவெனில்— தமிழர்களின் மத்தியில் பூர்வகாலத்திலும் இப்போதும் அநேக புத் திமான்களும் ஞானவான்களும் இருந்திருக்கிறார்கள். முடிவில் இந் தியாமுழுமையும் ஒரே ஜனங்களாக ஏற்படவேண்டுமானல் சென்னை ராஜதானிக்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ்ப்பாஷையைத் தெரிந் துகொள்ளவேண்டும்."

"தமிழ்ப் பாஷையைப்பற்றி ஸ்ரீமாங்-காந்தி சிலாகித்துப் பேசுவ தையன்றி, தமிழர்களும் அவரின் நன்குமதிப்பைப் பெற்றிருப்பது நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது"

சுதேசமித்திரன்.

---

உ

சிவமயம்.

# சோதிடகணிதம்.

(முற்றெடர்ச்சி.)

## மாதவாக்கியம் வருமாறு.

| மாதம். | நாள். | நாழி. | விநாடி. | சங்கேதவாக்கியம். |
|---|---|---|---|---|
| சித்திரை | 30 | 55 | 32 | சூரமுன்கூறி |
| வைகாசி | 62 | 19 | 44 | நூறுகோடி |
| ஆணி | 93 | 56 | 22 | போதாயாறார் |
| ஆடி | 125 | 24 | 34 | நூறுபிரை |
| ஆவணி | 156 | 26 | 44 | உண்டான்குலாவன் |
| புரட்டாசி | 186 | 54 | 6 | வென்முன்தூதுவன் |
| ஐப்பசி | 216 | 48 | 13 | நீறுபூசேரல் |
| கார்த்திகை | 246 | 18 | 37 | பேசிர்நூற்கற்றூர் |
| மார்கழி | 275 | 39 | 30 | தையல்கூட்டீர்மால் |
| தை | 305 | 6 | 46 | கோமர்குண்டென்றூர் |
| மாசி | 334 | 55 | 10 | பெற்றுதுண்டோமின் |
| பங்குனி | 365 | 15 | 31 | குருநீதினில் |

2-வது அதிகாரம்.

## நவக்கோள் மத்தியஸ்புடம் செய்ய சூரியமத்திய கணிதம்.

—:(o):—

முன் நவக்கோளுக்கு கண்டமெனவந்த எண்ணை 31. (முப்பத்தொன்றில்) பெருக்கி 11323-ல் வகுத்து வந்த மிச்சத்தை 12-ல் பெருக்கி 11323-க்கு ஈந்து வந்தபலம் ராசியாகவும், மறுபடியும் மிச்சத்தை 30-ஆல் பெருக்கி வகுக்கு மெண்ணிற் கொடுத்தும் பெற்ற பலம் பாகையாகவும், மிச்சத்தை 60-ல் பெருக்கி அதே 11323-ல் வகுத்துவந்த பலம் கலையாகவும், மிச்சத்தை 60-ல் பெருக்கி 11323-க்கு ஈந்து வந்தபலம் விகலையாகவும்கொண்டு, சேஷம் பாதிக்கு மேற்பட்டால் ஒன்றாகவும், பாதிக்கு குறைபுமாயின் நீக்கி விடவும். இதற்குக் கண்டராசி பாகை, கலை, விகலை யென்பர்,

குறிப்பு:—மேலே முதன்முதல் 31-ல் பெருக்கி 11323-க்கு யெடுத்து வந்த பலம் நிஷ்பலமே.

சேஷமறியும்படி:— மேலே ஏற்பட்டிருக்கும் நவக்கோள் கண்டத்தை வைத்து 10026-ல் வகுக்க வந்த ஈவு கலை, மிகுந்த சேஷத்தை 60-ல் பெருக்கி 10026-க்குக் கொடுத்து வந்த பலம் விகலை. இதற்கு சேஷராசி, பாகை, கலை என்று பெயர். கலை ஜாஸ்தியாக விருக்கும்மானல் இராசி, பாகைகளாகச்செய்துகொள்ளவும்.

மேலேவந்த கண்டராசி' பாகை, கலை, விகலைகளில் சேஷராசி, பாகை, கலைகளைக் கழித்துவந்த ராசி, பாகை, கலை, விகலைகளுக்கு கண்டசேஷ ராசி, பாகை, கலை, விகலை யெனப்பெயர்.

இனி, நித்தியகதி காண, சூரியனுக்கு நித்தியகதி 56 நாழிகை 8 விநாடியாக, ஜனன நாழிகை விநாடிக்கு எவ்வளவாயிற்றெனக் கண்டு பிடித்து மேலே வைத்திருக்கும் கண்டசேஷ இராசி, பாகைகளுடன் கூட்டவும். இந்த தொகையே சூரியமத்தியமாகும்,

இதேமாதிரியாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையிற்கண்டபடி செய்து, அதிற்சொல்லிய துருவத்தையும் கூட்டி வந்ததுதான் மத்தியஸ்புடம்.

## அட்டவணை.

| கிரகங்கள். | பெருக்கும் எண். | வகுக்கும் எண். | கண்டசேஷம் வகுத்தல். | கூட்டுவது, கழிப்பது. | நித்யகதி. | | | துருவம்சேர்த்தன. | | | மந்தோச்சம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இராசி. | பாகை. | கலை. | இராசி. | பாகை. | கலை. | இராசி. | பாகை. |
| சூரியன் | 31 | 11323 | 10026 | கழித்தல் | ,, | 59 | 8 | 12 | ,, | ,, | 2 | 18 |
| சந்திரன் | 600 | 16393 | 2920 | கழித்தல் | 13 | 10 | 35 | 6 | 19 | 17 | ,, | ,, |
| துங்கன் | ,, | 3232 | 768 | ஷை | ,, | 6 | 11 | 11 | 28 | 8 | ,, | ,, |
| செவ்வாய் | ,, | 687 | 1866 | கூட்டுதல் | ,, | 31 | 26 | 11 | 13 | 34 | 3 | 28 |
| புதன் | 100 | 8707 | 191 | ஷை | 4 | 5 | 33 | 10 | 25 | 1 | 7 | ,, |
| குரு | 10 | 13323 | 1940 | கழித்தல் | ,, | 4 | 59 | 5 | 28 | 44 | 6 | ,, |
| சுக்கிரன் | 500 | 112349 | 543 | கழித்தல் | ,, | 36 | 8 | 6 | 6 | 18 | 3 | ,, |
| சநி | ,, | 10766 | 4526 | கூட்டுதல் | ,, | 2 | ,, | 4 | 1 | 58 | 7 | 26 |
| இராகு | ,, | 6795 | 813 | ஷை | ,, | 2 | 11 | 2 | 21 | 27 | | |

3-வது கொடுத்த துங்கன் என்பது சந்திரஸ்புடத்தில் வேண்டியிருப்பதால் அதன் அம்சமும் கூறப்பட்டது.

பந்தோச்சம்என்பதும், பின் ஸ்புடத்தில் கழித்துச்செய்யவேண்டியது.

3-வது அதிகாரம்.

## சூரியஸ்புடம்.

—:(o):—

மேலதிகாரத்தில் பெற்ற சூரிய மத்தியத்தில் மந்தோச்சம் கழித்து, மீதிநின்ற இராசி பாகை கலைகட்கு இரணதனமறிந்து (அஜாதிதுலாதி யறிந்து) புஜாகோடிசெய்து வாக்கியம் கண்டுவந்த பலன் முழுவதையும் வாக்கியத்தின் கலைகளோடு கூட்டிவந்த பாகை கலைகளை சூரிய மத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய சூரிய சுத்த ஸ்புடமாகும்.

| | கலை | விகலை | வாக்கியம் | | | வாக்கிய பலன்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 8 | 8 | 9 | 72 | 8 | 17 | 116 | 4 |
| 2. | 17 | 9 | 10 | 78 | 6 | 18 | 119 | 3 |
| 3. | 25 | 8 | 11 | 85 | 7 | 19 | 122 | 3 |
| 4. | 33 | 8 | 12 | 91 | 6 | 20 | 124 | 2 |
| 5. | 41 | 8 | 13 | 97 | 6 | 21 | 126 | 2 |
| 6. | 49 | 8 | 14 | 102 | 5 | 22 | 128 | 2 |
| 7. | 57 | 8 | 15 | 107 | 5 | 23 | 129 | 0 |
| 8. | 64 | 7 | 16 | 112 | 5 | 24 | 129 | 1 |

## சந்திரஸ்புடம்.

---

சந்திரமத்தியத்தில் துங்கமத்தியத்தைக் கழித்து, மீதி நின்ற இராசி பாகை கலைகளுக்கு இரணதனமறிந்து புஜாகோடி செய்துவாக்கியங்கண்டு வந்தபலனை ஷை வாக்கியத்திற் கூட்டி வந்த கலைகளை சந்திரமத்தியத்தில் கூட்டல் கழித்தல் செய்ய சந்திரசுத்தஸ்புடமாகும்.

(இன்னும் வரும்.)

சோமசுந்தரதேசிகன்,

இலக்கணவிளக்க பரம்பரை,

---